CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

XII

தைத்திரீயோபநிஷத்

(அருணம்)

(ஏழு, எட்டு, ஒன்பது ப்ரச்னங்கள்)

ஸ்ரீ அ. சுப்பராமன்,
'மஹரிஷி கார்டன்',
18A/9, 5வது கிராஸ் தெரு, சி.ஐ.டி. காலனி,
மயிலாப்பூர், சென்னை - 600004.

2007

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

TAITTIRIYOPANISHAD

தைத்திரீயோபநிஷத்

(அருணம்)

(ஏழு, எட்டு, ஒன்பது ப்ரச்னங்கள்)

உரையாசிரியர்:
ப்ரம்மஸ்ரீ G. R. ராமசந்திர சாஸ்திரிகள்,
கும்பகோணம்.

ஸ்ரீ அ. சுப்பராமன்,
'மஹரிஷி கார்டன்',
18A/9, 5வது கிராஸ் தெரு, சி.ஐ.டி. காலனி,
மயிலாப்பூர், சென்னை - 600004.

2007

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

இரண்டாம் பதிப்பு : 2007

உரிமை பதிவு பெற்றது.

பிரதிகள் : 100

அட்டவணை

முன்னுரை	1—8
ஏழாவது ப்ரச்னம்	9
எட்டாவது ”	40
ஒன்பதாவது ”	70

இலவச வெளியீடு

அச்சிட்டோர்:

சாவித்திரி லேசர் பிரிண்டிங்
37/14, பெரியபள்ளி தெரு,
மந்தைவெளிபாக்கம்,
சென்னை - 600 028.
போன்: 2464 3268

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

।। वेद स्तुतिः ।।

வேதஸ்துதி:

निश्वासरूपाः परमेश्वरस्य
प्रमाणमूर्धन्यमाश्च धर्मे।
निरन्तरं रक्षत नः कुलानि
वेदा वयं वः शरणं प्रपन्नाः ।।1।।

நிச்வாஸரூபா: பரமேச்வரஸ்ய ப்ரமாண
மூர்த்தன்யதமாஸ்ச தர்மே |
நிரந்தரம் ரக்ஷதந: குலாநி வேதா
வயம்வ: சரணம் ப்ரபன்னு: || 1 ||

ஸ்ரீ பரமேச்வரனின் மூச்சுக் காற்ருகவும், அனுஷ்டிக்க வேண்டிய தர்மங்கள் விஷயத்தில் தலை சிறந்த ஆதாரமாகவும் விளங்குகின்ற வேத வேதங்களே! நாங்கள் உங்களை சரணமடைகிரேம். எப்பொழுதும் எங்களை ரக்ஷிக்க வேண்டும்.

ऋग्वेदरूपेण विनिर्गता ये
प्रत्यङ्मुखाद्वै परमेश्वरस्य।
यज्ञेषु हौत्रे विनियोक्ष्यमाणाः
वेदा वयं वः शरणं प्रपन्नाः ।।2।।

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

ரிக்வேத ரூபேண விநிர்கதாயே
ப்ரத்யங் முகாத்வை பரமேச்வரஸ்ய ।
யக்ஞேஷு ஹௌத்ரே விநியோக்ஷ்யமாணு:
வேதாவயம்வ: சரணம் ப்ரபன்ணு: ॥ 2 ॥

ஸ்ரீ பரமேச்வரனுடைய ''ஸத்யோஜாதம்'' என்னும் மேற்கு முகத்திலிருந்து ரிக்வேத ரூபமாகத் தோன்றி, சிறந்த வேள்விகளில் ''ஹௌத்ரம்'' எனும் ஸ்தோத்ரம் செய்யும் கர்மாவில் ஓதப்படுகின்ற, ஹே வேதங்களே! நாங்கள் உங்களை வணங்குகிறோம்.

आध्वर्यवे कर्मणि शोभमाना:
ह्यागत्य सौम्याद्वदनात् शिवस्य ।
सर्वस्य लोकस्य शिवंकरा ये
वेदा वयं व: शरणं प्रपन्ना: ॥3॥

ஆத்வர்யவே கர்மணி சோபமாநா: ஹ்யாகத்ய
ஸௌம்யாத் வதனாத் சிவஸ்ய ।
ஸர்வஸ்ய லோகஸ்ய சிவம்கராயே வேதா
வயம்வ: சரணம் ப்ரபன்ணு: ॥ 3 ॥

ஸ்ரீ பரமேச்வரனுடைய ''வாமதேவம்'' எனும் வடக்கு முகத்திலிருந்து யஜுர்வேத ரூபமாக ஆவிர்பவித்து, யக்ஞங்களில் ''ஆத்வர்யவம்'' எனும் கர்மாவில் பொலிவுற்று, அனைத்து, உலகிற்கும் மங்களத்தைக் கொடுக்கின்ற ஹே,

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

வேதங்களே! நாங்கள் உங்களை நமஸ்கரிக்கின்றோம்.

औद्गातृके कर्मणि गीयमाना:
शम्भोस्सदा मोदकराश्च यूयम्।
शिवस्य पूर्वाद्वदनात्प्रवृत्ता:
वेदा वयं व: शरणं प्रपन्ना: ॥4॥

ஔத்காத்ருகே கர்மணி கீயமானா:
சம்போஸ் ஸதா மோதகாரஸ்ச யூயம் |
சிவஸ்ய பூர்வாத் வதனாத் ப்ரவ்ருத்தா:
வேதாவயம்வ: சரணம் ப்ரபன்னா: ॥ 4 ॥

பரமனின் "தத்புருஷம்" எனும் கிழக்கு முகத்தினின்று ஸாம வேத ரூபமாக உதித்து, ஸ்ரீ ஸதா சிவத்திற்கு எப்பொழுதும் ஸந்தோஷத்தை கொடுத்துக் கொண்டு, வேள்விகளில் 'ஔத்காத்ருகம், எனும் கர்மாவில் கானம் செய்யப்படுகின்றஹே, வேதங்களே! உங்களை வந்தனம் செய்கின்றோம்.

आथर्ववेदा: परमेश्वरस्य
ह्यघोरवक्त्रात्तु समागता ये।
ब्राह्मे तथा पुष्टिकरे सुयुक्ता:
वेदा वयं व: शरणं प्रपन्ना: ॥5॥

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

ஆதர்வ வேதா: பரமேச்வரஸ்ய ஹ்யகோர
வக்த்ராத்து ஸமாகதாயே |
ப்ராஹ்மமே ததா புஷ்டிகரேஸுயுக்தா: |
வேதாவயம்வ: சரணம் ப்ரபன்னு: || 5 ||

ஸ்ரீ சிவபெருமானின் "அகோரம்" எனும் தக்ஷிண முகத்திலிருந்து அதர்வண வேத ரூபமாக ஆவிர்பவித்து யாகங்களில் "ப்ராம்ஹம்" மற்றும் புஷ்டி கர்மாக்களில் இயம்பப்படுகின்ற ஹே, வேதங்களே! உங்களை ஸ்துதி செய்கிறோம்.

वेदोक्तकर्माणि शुभानि कृत्वा
वेदोक्तसर्वाणि फलानि लब्ध्वा।
वेदान्तविज्ञानसुनिश्चितार्थाः
सर्वे भवामो भवतां प्रसादात् ।।6।।

வேதோக்த கர்மாணி சுபானி க்ருத்வா
வேதோக்த ஸர்வாணி பலானி லப்த்வா ।
வேதாந்த விக்ஞான ஸுனிச்சிதார்த்தா:
ஸர்வே பவாமோ பவதாம் ப்ரஸாதாத் || 6 ||

ஹே வேதங்களே! உங்கள் திருவருளால் நாங்கள் வேதங்களில் கூறப்பட்ட சுபமான தர்மங்களை அனுஷ்டித்து அவைகளால் கூறப்பட்ட எல்லா நன்மைகளையும் அடைந்து வேதாந்த விஞ்ஞானத்தால் தீர்மானிக்கப்பட்ட (ஞானத்தின் மூலம்) வேத விழுப்பொருளை அடைவோமாக.

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

முகவுரை

தைத்திரீய ஆரண்யகம் முதல் ப்ரச்னம் ஆருணகேதுக சயனத்தை விஸ்தாரமாக ப்ரதிபாதனம் செய்கிறது. இதன் பெருமை அருணம் முதல் ப்ரச்ன பாஷ்யத்தில் உரையில் விஸ்தாரமாக எழுதப்பட்டுள்ளது. இரண்டாவது ப்ரச்னத்தில் ஸ்வாத்யாய ப்ராம்மணம், ஸந்தியாவந்தனம், அர்க்ய ப்ரதான விதி, கூச்மாண்ட ஹோம மந்த்ரங்கள், ப்ரஹ்மயக்ஞ ப்ரகாரம், திருவோபஸ்தானம், சிம்சுமார மந்திரம், திக் உபஸ்தானம் இவைகள் உபதேசிக்கப்பட்டு உள்ளது. மூன்றுவது ப்ரச்னத்தில் சாதுர்ஹோத்ரிய மந்திரங்கள், ப்ரஹ்மமேத ப்ரயோக மந்திரங்கள் முதலியன உபதேசிக்கப்பட்டுள்ளது. நான்காவது ப்ரச்னத்தில் ப்ரவர்க்யம், ப்ரவர்க்ய மந்த்ரங்கள், கிராமம், க்ருஹம் இவைகளில் ஏற்படும் துர்நிமித்த பூதமான உலூகபதனம் முதலியவைகளுக்கு பரிஹார்த்தமான ஹோம மந்த்ரங்கள், ஸௌம்யம் விரதத்திற்குண்டான மந்த்ரங்கள், மதந்தீ ஸம்பந்தமான மந்த்ரங்கள் கோஷ சாந்தி முதலியவை. ஐந்தாம் ப்ரச்னம் முழுவதும் ப்ரவர்க்ய ப்ராஹ்மணம், மதந்தி சம்மந்தமான மந்திரங்கள். ஆருவது ப்ரச்னம் பித்ருமேத ப்ரயோகத்திற்கு மந்திரங்கள் அடங்கியது. ஏழாம் ப்ரச்னம் சீக்ஷாவல்லி ப்ரஹ்ம வித்தைக்கு ஸாதனமான உபாஸனங்கள்

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

ஜபாதிகள் அடங்கியது. எட்டாவ துப்ரச்னம் ஆனந்தவல்லி ஆத்மஞான விஷயத்தை உபதேசிக்கிறது. ஒன்பதாம் ப்ரச்னம் 'ப்ருகுவல்லியும்' ஆனந்தவல்லியில் கூறப்பட்ட ஆத்மஞானத்தை சுலபமாக அறிந்து கொள்வதற்கு உபாக்யானரூபமாக ப்ரதிபாதனம் செய்கிறது. ஆனந்தவல்லியும், ப்ருகுவல்லியும் ப்ரும்மமேத ப்ரயோகத்தில் கர்ண மந்த்ரபடனமாக ஸூத்ரகாரர்களினுல் உபதேசிக்கப்பட்டுள்ளது. பத்தாவது ப்ரச்னத்தில் ஆத்ம ஞானமும் ஆத்மஞானத்தை அடைவதற்கு ஸாதனமான சித்த, சுத்திக்கு காரணமாக விதிக்கப்பட்டுள்ள கர்மானுஷ்டானத்திற்கு வேண்டிய மஹா மந்திரங்களும், சித்த சுத்தி மூலமாக ஸாதன சதுஷ்டய ஸம்பத்தோடு ச்ரவணமான நிதித்யாஸனங்களினுல் பெறப்பட்டதுஆத்மஞானத்தின் மஹிமையும் மற்றும் ஆத்மஞானம் ஸம்பந்தமான பல உபாஸனங்கள் முதலியவைகள் உபதேசிக்கப்பட்டுள்ளன. ப்ராசீனமான சிஷ்டாசார ஸம்ப்ரதாயங்கள் பற்றிய விபரம்:—

நான்காவது, ஐந்தாவது ப்ரச்னங்களை ப்ராத: காலத்து நியமங்களுடன் பாராயணம் செய்தால் ஸகல பாபங்களும் நிவர்த்தி ஆகிவிடும். மேலும் ஐந்தாவது ப்ரச்னத்தால் பஞ்சாதிக்கு ஒரு ப்ரதக்ஷிணமாக 108 அச்வத்த ப்ரதக்ஷிணம் செய்வது மிகவும் ச்லாக்யம் ஆனது என்றும், புத்ரப்ரதம் என்பதும் பெரியோர்களின்

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

அபிப்ராயம். ஆருவது ப்ரச்னத்தை சனிக்கிழமை அன்று காலையில் ஆசாரத்துடன் அச்வத்தவ்ருக்ஷ ஸமீபத்தில் அமர்ந்து தர்ப்ப பவித்ர பாணியாக பாராயணம் செய்வது ஸகல துரிதங்களையும் நிவர்த்தி செய்துவிடும். அபமிருத்யுவை நிவர்த்தி செய்யும் என்பது மஹான்களின் அபிப்ராயம். 2. 3. 4. 5 ஆகிய ப்ரச்னங்களை காளாஷ்டமி. மஹாதேவாஷ்டமி அல்லது வைக்கத்து அஷ்டமீ அன்று அதாவது பகவான் எல்லோருக்கும் படி அளக்கும் தினத்தில் காலையில் ஸ்ரீ பரமேச்வரன் வ்ருஷபவாகனத்தில் எழுந்தருளி வீதிப்ரதக்ஷிணம் செய்யும் போது ஸ்வஸ்தி வாசனமாக பாராயணம் செய்வது பாண்டிய நாட்டு திருக்கோயில்களில் ப்ரஸித்தமானது.

உபநிஷத் பாராயணம் ப்ரதிதினம் செய்ய வேண்டியதாக தர்ம சாஸ்திரங்களில் கூறப்படுகின்றது. [ஸ்வசாகோபநிஷத், உபநிஷத், கீதா, விஷ்ணு ஸஹஸ்ரநாமம், ஆதித்யம், வைச்வதேவம்ச ஷட்கர்மாணி தினே, தினே] மேலும் ஏகாதசி அன்று ஸாயம் ஸந்தியாவத்தனத்திற்கு பின்பு அச்சித்ராச்வமேத பாராயணம் செய்வதும், த்வாதசியின்று ப்ராத: காலத்தில் காடகம் மூன்று ப்ரச்னம் பாராயணம் செய்வதும் அதன் பிறகு பாரணைக்கு முன்பாக உபநிஷத் பாராயணம் செய்வதும் மிகவும் பிராசீனமான வழக்கம்.

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

காடகத்தை விடியற்காலையில் கூட பாராயணம் செய்வது உண்டு.

இவைகள் பெரியோர்களுடன் இணைந்து பாராயணம் செய்வது ப்ராசீன வழக்கம். இவ் விஷயங்களை எல்லாம் பெரியோர்களான மஹான் களிடம் இருந்து தெரிந்து கொள்வது மிகவும் நன்று. அதற்கு ராமாயணத்தில் த்ருஷ் டாந்தம் (எடுத்துகாட்டு) கூறப்பட்டுள்ளது. ஸ்ரீ ராமன் க்ரஹத்திற்கு வரும் பெரியோர்களுக்கு உபசாரம் புரிந்து, அவர்களிடமிருந்து நல்லவை களை ஸம்ப்ரதாயமான விஷயங்களை ஆசையுடன் தெரிந்து கொள்வார் என்று பாலகாண்டத்தில் கூறப்பட்டுள்ளது.

இந்த உபநிஷத்தை அர்த்த சுருக்கம் ஸ்ரீ வித்யாரண்ய பாஷ்யத்தையும், ஸ்ரீ பகவத்பாதாள் பாஷ்யத்தையும் தழுவி எழுதப்பட்டது.

लोकास्समस्ताः सुखिनोभवन्तु समस्त सन्मङ्गळानि सन्तु।

शुभम्

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

அருணம் ஏழாவது ப்ரச்னம்

शन्नोमित्रः शंवरुणः । शन्नो भवत्वर्यमा । शन्न इन्द्रोबृहस्पतिः । शन्नोविष्णुरुरुक्रमः । नमोब्रह्मणे । नमस्तेवायो । त्वमेवप्रत्यक्षं ब्रह्मासि । त्वमेवप्रत्यक्षं ब्रह्म वदिष्यामि । ऋतंवदिष्यामि । सत्यं वदिष्यामि । तन्मामवतु । तद्वक्तारमवतु । अवतुमां । अवतुवक्तारम् । ओंशान्तिः शान्तिः शान्तिः ।

தைத்திரீயக ஆரண்யகத்தில் 6 ப்ரச்னங்கள் கர்மானுஷ்டானங்களைப் பற்றியவை. முதல் ப்ரச்னம் ஆருண கேதுக சயனம். 2ம் ப்ரச்னம் ஸந்த்யோபாஸனம், கூச்மாண்ட ஹோமம், ப்ரஹ்ம யக்ஞவிதி:, மூன்ருவது ப்ரச்னம் சதுர்ஹோத்ரு மந்த்ரங்கள். ப்ரஹ்மமேதத்திற்குரிய மந்த்ரங்கள். நான்காவது ப்ரச்னம் ஸோமயாகங்களில் அனுஷ்டிக்கப்படும் ப்ரவர்க்ய கர்மா ஸ்வருபம் அதற்கு வேண்டிய மந்த்ரங்கள், சில காம்ய கர்மாக்களின் மந்த்ரங்கள். ஐந்தாவது ப்ரச்னம் — ப்ரவர்க்ய ப்ராம்மணம். ஆருவது ப்ரச்னம் - பித்ருமேத மந்த்ரங்கள். இது வரை கர்ம காண்ட ஸம்பந்தமானவை கர்ம யோகம். ஏழாவது, எட்டாவது, ஒன்பதாவது ப்ரச்னங்கள், உபாஸன காண்டம் (பக்தி யோகம்) ஞான காண்டம்—ஆத்மஞானம். பத்தாவது ப்ரச்னம் ஞான ஸாதனங்களான நித்ய கர்மாக்களுக்கு வேண்டிய உத்தம மந்த்ரங்கள் முதலி

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

யவை. ஏழாவது ப்ரச்னம் சீக்ஷாவல்லீ. எட்டாவது ப்ரச்னம் ஆனந்தவல்லீ. ஒன்பதாவது ப்ரச்னம் ப்ருகுவல்லீ. பத்தாவது ப்ரச்னம் யாக்ஞிகீ உபநிஷத் என்றும் மஹாநாராயணோப நிஷத் என்றும் சொல்லப்படுகிறது. உபநிஷத் எனும் பதம் उप नि என்னும் உபஸர்க்கங்களுடன் கூடிய विशरण - गति उपवसादनेषु எனும் அர்த்தங்களில் வரும் षद्‌ल धातु (மூலச் சொல்லிலிருந்து) ஏற்பட்டுள்ளது. உபநிஷத் பதத்திற்கு மூன்று அர்த்தங்கள். மஹான் களால் ப்ரதர்சனம் செய்யப்படுகிறது. 1. இந்த க்ரந்தத்தினுல் பெறப்படும் ஞானம் துக்கத் திற்குக் காரணமான அக்ஞானத்தை (அறி யாமையை) சிதற அடித்து விடுகிறது. 2. உண்மையான ஆத்ம ஞானத்தைக் தெரிவித்து நித்யமான ஆனந்தானுபவத்தை அளிக்கிறது. ஆத்மாவின் வாஸ்தவ ஸ்வரூபத்தை விளக்கிக் காட்டி ஆனந்தமளிக்கிறது 3. இந்த க்ரந்தத் தில் உத்தம நிச்ரேயஸம் அமர்ந்துள்ளது. அதாவது பொதிந்துள்ளது. வேதாந்த விஷய மான சில முக்ய விபரங்கள், அருணம் முதல் ப்ரச்னத்தில் ஆங்காங்கு கூறப்பட்டுள்ளன கவனித்துப் பார்த்துக் கொள்வது மிகவும் உப யோகமாகயிருக்கும்.

அனுவாகம் 1. शन्नोमित्रः . . . . ओं शांतिश्शांन्ति श्शान्तिः எனும் சாந்தி பாடம் மித்ர தேவதை-வருணன்- அர்யமா இந்திரன் ப்ருஹஸ்பதி விஸ்தாரமானஸஞ்

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

சாரத்தை உடைய விஷ்ணு இந்த தேவர்கள் நமக்கு (ஆசார்யாள் சிஷ்யர்கள்) மற்றும் நம் எல்லோருக்கும் க்ஷேமத்தைக் கொடுத்து ரக்ஷிக்க வேணும். ப்ரும்ம ஸ்வரூபத்திற்கு நமஸ்காரம். வாயு பகவானுக்கு நமஸ்காரம். வாயு பகவானே, தாங்கள் தான் ப்ரத்க்ஷமான ப்ருஹ்ம ஸ்வரூபமாக உள்ளவர். ஆகவே தங்களைத்தான் ப்ரத்யக்ஷ ப்ருஹ்மமாக அறிந்து போற்றுகிறோம். உண்மையைக் கூறுகிறோம். அனுபவ பூர்மாகக் கூறுகிறோம். அத்தகைய பரப்ருஹ்ம வஸ்து, சிஷ்யனுன என்னை ரக்ஷிக்க வேணும். என்னுடைய ஆசார்யாளையும் ரக்ஷிக்க வேணும். ॐ शान्तिः என்று மும்முறை ப்ரார்த்தனை செய்யப் படுகிறது மூன்று வித ப்ரதிபந்தகங்களை நிவர்த்தி செய்வதற்காக மூன்று முறை சாந்தி சப்தம் ப்ரயோகிக்கப்படுகிறது.

அனுவாகம் 2. शीक्षां व्याख्यास्यामः:-இந்த அனுவாகத்தில் வேத மந்த்ரங்கள் உச்சரிக்கப்பட வேண்டிய ப்ரகாரம் (முறை) பற்றி உபதேசிக்கப்படுகிறது. 1. அகாராதி வர்ணங்கள். 2. உதாத்தாதி ஸ்வரங்கள். உதாத்தம், அனுதாத்தம், ஸ்வரிதம், ப்ரசயம், 3. மாத்ரை கால அளவு. ஹ்ரஸ்வத்திற்கு ஒரு மாத்திரை. தீர்க்கத்திற்கு 2 மாத்ரை. ப்லுதத்திற்கு 3 மாத்ரை. மாத்ரை என்பது கை சொடுக்கும் அளவுள்ள காலம். 4 பலம்—ப்ரயத்ன விசேஷம். ஆப்யந்தர ப்ரயத்னம் 4.

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

(1) ஸ்ப்ருஷ்ட ப்ரயத்னம் (2) ஈஷத்து-ஈஷத் ஸ்ப்ருஷ்டம் (3) ஸம்வ்ருதம் (4)விவ்ருதம். பாஹ்ய ப்ரயத்னம், (1) விவார ப்ரயத்னம் (2) ஸம்பார: (3) ச்வாஸ: (4) நாத: (5) கோஷ: (6) அகோஷ: (7) அல்பப்ராண: (8) மஹாப்ராண: (9) உதாத்த: (10) அனுதாத்த: (11) ஸ்வரித: (5) ஸாம (ஸாம) மத்யம ரீதியில் உச்சரிப்பது, (6) ஸந்தான: (ஸந் தான: அனுஸ்யூதமாக உச்சரித்தல் (தொடர்ச்சி யாக உச்சரித்தல்) வேதத்திலுள்ள அக்ஷரங்கள் உச்சரிக்கும் பொழுது முக்யமாக முகத்தில் எந்த ஸ்தானத்திலிருந்து வருகிறது, அவைகளின் குணங்களையும் மேலே சொல்லப்பட்டவை குறிக் கின்றன.

உபநிஷத் பாகம்-அர்த்தத்தை ப்ரதானமாகக் கொண்டுள்ளதால், வேதவாக்ய உச்சாரண விஷயத்தில் சற்று அச்ரத்தை ஏற்படலாம். அது ஏற்படக்கூடாது என்பதற்காக இந்த சீக்ஷா விதிகள் கூறப்பட்டுள்ளன.

அனுவாகம் 3 ஸஹநாவ: இந்த அனுவாகத்தில் வேத பாடம் மாத்திரம் அத்யயனம் செய்தவர் களுக்கு வேதார்த்தமான ஸூக்ஷ்மமான பரமாத் மாவில் மனது முதலில் செல்வது ஸுலபமல்ல என்பதால், வேத சப்தங்கள் ஸம்பந்தமான உபாஸனம் கூறப்படுகிறது. இந்த உபாஸனங் களால் ஏற்படும் கீர்த்தி, ப்ருஹ்மவர்ச்சஸம் முதலிய நன்மைகள் ஆசார்யாள், சிஷ்யர்கள்

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

இருவருக்கும் ஏற்படவேண்டும் என்று सहनौ यश: ब्रह्मवर्चसं எனும் இரண்டு வாக்யங்களால் வர்ணிக்கப்படுகிறது. இதற்கு மேல் ஸம்ஹிதா விஷயமான உபாஸனங்கள் உபதேசிக்கப்படுகின்றன. இந்த உபாஸனம் ஐந்து அதிகரணங்களில் கூறப்படுகின்றன. அதிகரணம் என்பதற்கு ஆதாரம் என்று பொருள். ஸம்ஹிதை மூன்று விதம் "அக்ஷரஸம்ஹிதை" (2) பத ஸம்ஹிதை "ராம பாஹி" "राम पाहि" (3) வாக்ய ஸம்ஹிதை 'ராம சீக்ரம் ஆகச்ச' 'राम शीघ्रं आगच्छ मां परिपालय, என்பவை உதாஹரணம். அத்யயனம் செய்தவேத ஸம்ஹிதையில் லோக ஸம்பந்தமாயும் (2) ஜ்யோதிஸ் ஸம்பந்தமாயும் (3) வித்யா சம்பந்தமாயும் (4) ப்ரஜா ஸம்பந்தமாயும் (5) ஆத்ம ஸம்பந்தமாயும் ஐந்து விதமான உபாஸனங்கள்.

எப்படி உபாஸிப்பது? உதாரணமாக "इषेत्वा" என்று எடுத்துக் கொண்டால் इषे என்னும் பூர்வ பாகத்தில் ப்ருத்வீ ஸ்வரூபத்தையும் த்வா எனும் உத்தர பாகத்தில் தேவ லோகத்தையும் நடுவில் உள்ள மற்றொருதகாரத்தில் ஸந்தான ரூபமான வாயு ஸ்வரூபத்தையும் இஷேத்வா எனும் இடைவெளியில் ஆகாச ஸ்வரூபத்தையும் தியானிக்க வேண்டும். இது அதிலோகம் என்னும் லோக ஸம்பந்தமான உபாஸனையாகும். इषे - पृथिवी त्- वायुः त्वा-द्यौः ஆகாசம் इषे எனும் பாகத்தை ப்ருதிவீ பாகமாகவும் த் என்பதை வாயு ஸ்வரூபமாகவும் த்வா எனும் பாகத்தை தேவ லோகமாக

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

வும் इषेत्वा - இரண்டுக்கும் மத்யமான இடை வெளியை ஆகாசமாயும் தியானிக்க வேண்டும்.

இதேபோல் மற்றவைகளும் अथाधिज्यौतिषम् ஜ்யோதிஷ ஸம்பந்தமான உபாஸனை முன் போலவே பூர்வ ரூபத்தில் அக்னி பகவானையும் உத்தர பாகத்தில் ஆதித்யனையும், இடைவெளி யில் ஜல ஸ்வரூபத்தையும் (ஜலதேவதை) ஸந் தானத்தில் மின்னல் தேவதையையும் தியானிக்க வேண்டும். (3) अधिविद्यम्-வித்யா சம்பந்தமான உபாஸனை பூர்வ ரூபத்தில் ஆசார்யனையும் உத்தர ரூபத்தில் சிஷ்யனையும் ஸந்தியில் வித்யை யையும் ஸந்தானத்தில் ப்ரவசனத்தையும் (கற் பித்தல் எனும் செய்கை) தியானிக்க வேண்டும். (4) अथाधिप्रजम् । ப்ரஜா ஸம்பந்தமான உபாஸனம் பூர்வ ரூபத்தில் மாதாவையும், உத்தர ரூபத்தில் பிதாவையும், ஸந்தியில் ப்ரஜையையும், (மக்களை யும்) ஸந்தானத்தில் பிறப்பையையும் தியானிக்க வேண்டும்.

अथाध्यात्मम् சரீர ஸம்பந்தமான உபாஸனம் பூர்வ ரூபத்தில் கீழ்த்தாடையையும் உத்தர ரூபத் தில் மேல் தாடையையும், ஸந்தியில் வாக்கையும், ஸந்தானத்தில் நாக்கையும் தியானிக்க வேண்டும். இந்த மஹா ஸம்ஹிதோபாஸனத்தை அப்ய ஸித்தவனுக்கு முன் கூறப்பட்டுள்ள முறையில் தியானம் செய்து உபாஸனை புரிந்தவனை நல்ல

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

ப்ரஜை, பசு, ப்ரஹ்மவர்ச்சஸம், போக போக்யங்கள், ஸ்வர்க்கலோகம் இவைகள் வந்தடையும்.

அனுவாகம் 4. यश्छन्दसामृषभो विश्वरूपः। இந்த அனுவாகத்தில் ஞானப்யாஸத்திற்கு முக்யமான நல்ல மேதையை அடைவதற்குரிய ஜபமந்த்ரங்களும் சித்த சுத்தியை கொடுக்கும் கர்மானுஷ்டானத்திற்கு வேண்டிய த்ரவ்யத்தை அளிக்கும் ஹோம மந்த்ரங்களும் உபதேசிக்கப்படுகின்றன. இந்த மந்த்ரம் ப்ரணவத்தின் (ஓங்காரத்தின்) மஹிமையை தெரிவித்து ப்ரணவத்யான பூர்வகம் இந்த மந்த்ரத்தை ஜபித்து வந்தால் (ப்ரணவ ஸ்வரூபமான பரமாத்மா) வேதங்களுக்குள் ச்ரேஷ்டமானதும் வேதங்களில் வ்யாபித்துள்ளதுமான ப்ரணவ ஸ்வரூபம் எனக்கு மேதையை அளிக்க வேண்டும். (மேதை தாரணத்துடன் கூடிய புத்தி) பரமாத்மா ப்ரதீகமான ப்ரண வஸ்வரூப பரமாத்மாவான ஹே இந்த்ரனே, (ச்ரேஷ்டனே) மோக்ஷ ஸாம்ராஜ்யத்திற்கு முக்ய ஸாதனமான ப்ரஹ்ம ஞானத்தை தரிக்கும் சக்தியை கொடுத்தருள வேண்டும்.

என்னுடைய சரீரம், ஜபம், ஹோமம் ஞானப்யாஸம் இவைகளுக்கு அனுகூலமான தகுதியுடன் இருக்கவேண்டும். என்னுடைய ஜிஹ்வை (நாக்கு) மதுரமான வார்த்தையுடன் ப்ரகாசிக்கவேண்டும். என்னுடைய காதுகளால் நான் நல்லவைகளை நிரம்பக் கேழ்க்க அருள் புரிய

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

வேண்டும். ஹே ப்ரணவ ஸ்வரூப, தாங்கள் அந்த பரப்ருஹ்மத்திற்கு (பரமாத்மாவிற்கு) கோசம் போல் உள்ளீர்கள். கத்திவைக்கப்படும் உறையின் மூலம் கத்தியை சுலபமாய் அறிவது போல் ப்ரணவத்தைக் கொண்டு (ப்ரணவோபாஸனையால்) பரமாத்மாவை அறிவது ஸுலபமல்லவா? இந்த ப்ரணவ பரமாத்மா, லௌகிக புத்தியால் மறைக்கப்பட்டுள்ளது. நன்முயற்சியால் அதை விலக்கி உண்மையைக் கண்டறிந்து மேன்மை பெறவேண்டும். ச்ரவணாதிகளால் அடைந்துள்ள என்னுடைய ஆத்ம ஞானத்தை ரக்ஷிக்க வேண்டும். இதுவரை மேதாபிவிருத்திக்காக ஜபிக்க வேண்டிய மந்த்ரம் உபதேசிக்கப்பட்டுள்ளது.

இனி இதற்குப் பிறகு ஐஸ்வர்யத்தை அடைவதற்குரிய ஹோமார்த்தமான மந்த்ரங்கள். இந்த ஹோமத்திற்கு ஆவஹந்தீ ஹோமம் என்று பெயர். आवहन्ती वितन्वाना - स्वाहा ஹே ப்ரணவாத்மக ஹே பரப்ரும்ம ஸ்வரூபமே, எனக்கு நல்ல மேதையை அளித்தபிறகு, மரஉரி (வல்கலம்) நல்ல வஸ்த்ரங்கள், பசுக்கள், அன்னம், தீர்த்தம் முதலிய எல்லா ஐஸ்வர்யங்களேயும் அளித்து அனுக்ரஹம் செய்ய வேணும். இவ்விடம் ஸ்ரீபகவத்பாதாளுடைய பாஷ்யம் மிகவும் விசேஷமானது. புத்தி அளித்த பிறகு ஐஸ்வர்யத்தைக் கொடுக்க வேண்டும். ஏனெனில் புத்தியில்லாதவனிடம் (அதுவும் துர்புத்தி உள்ளவனிடம்) கொடுக்கப்பட்ட

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

ஐச்வர்யம் அனர்த்தத்தை அல்லவா விளைவிக்கும்? அதாவது அவனுக்கும் கெடுதி மற்றவர்களுக்கும் கெடுதியில் போய்முடியும். ''अमेधसी हि श्री: अन्यपि भवति''. மேலும் குளிர்காலத்துக்கு வேண்டிய கம்பளிக்கு ஸாதனமான செம்மறியாடுகளும் வேண்டப்படுகிறது. अमायन्तु ब्रह्मचारिणस्वाहा ஞானம் கிடைத்து, த்ரவ்யமும் கிடைத்து விட்டது. மேற்கொண்டு என்ன செய்ய வேண்டும்? நல்ல சிஷ்யர்களுக்கு அன்ன பானாதி வஸதிகளுக்கு ஏற்பாடு செய்து வித்யாப்யாஸம் செய்து வைக்க வேண்டும்.

அதற்காக நல்ல ப்ரஹ்மசாரிகள், வித்யார்த்திகள் எல்லா இடங்களிலிருந்தும் வரவேண்டும். விசேஷமாயும் ப்ரகர்ஷமாயும், சமதமம் நிரம்பியவர்களாகவும் வரவேண்டும். நான் யசோவானாகவும், ச்ரேயோவானாகவும் விளங்க வேண்டும். இவை இருவருக்கும் (ஆசார்ய சிஷ்யர்கள் ஏற்பட ப்ரார்த்தனை) ஜலங்கள் எப்படி தாழ்வான ப்ரதேசத்தை வந்தடையுமோ நாள், பக்ஷம், மாஸம் முதலியவை ஸம்வத்ஸரத்தை அடைய முடியுமோ, அதுபோல் ப்ருஹ்மசாரிகள் வித்யாப்யாஸத்திற்காக என்னை வந்தடைய வேண்டும். ஹே ப்ரபோ, தாங்கள் களைப்படைந்தவர்களுக்கு விச்ராந்தி ஸ்தானம் போன்று விளங்குகிறீர்கள், எனக்கு நன்கு ப்ரகாசிக்க வேண்டும்.

2

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

அநுவாகம் 5

भूर्भुवस्सुवरितिवा एतास्तिस्रीव्याहृतयः।

இந்த அநுவாகத்தில் வ்யாஹ்ருதி ஸம்பந்தமான உபாஸனங்கள் உபதேசிக்கப்படுகின்றன. நம் முடைய ஸந்த்யாவந்தனாதி கர்மாக்களில் நமக்குப் பரிசயமான ஸப்த வ்யாஹ்ருதிகளில்

ओं भूः। ओं भुवः। ओंꣳसुवः। ओं महः। ओंजनः। ओं तपः। ओंꣳसत्यम्।

இவைகளில் முதல் நான்கு வ்யாஹ்ருதிகளில் உபாஸனம் விதிக்கப்படுகிறது. நான்கு ப்ரகார மான உபாஸனங்கள், 1, லோக த்ருஷ்டி உபா ஸனம் 2. தேவ த்ருஷ்டி உபாஸனம் 3. வேத த்ருஷ்டி உபாஸனம் 4, ப்ராண த்ருஷ்டி உபா ஸனம். லோக த்ருஷ்டி உபாஸனத்தில் भूः என்னும் வ்யாஹ்ருதியில் இந்த ப்ருதிவீ லோகத்தையும் भुवः என்னும் வ்யாஹ்ருதியில் அந்தரிக்ஷ லோகத் தையும் सुवः தேவலோகத்தையும் महः ஆதித்ய லோகத்தையும் த்யானம் செய்து உபாஸனம் செய்ய வேண்டும், மேலும் நான்காவது வ்யாஹ் ருதியான महः எனும் வ்யாஹ்ருதியை மாஹா சமஸ்யர் எனும் மஹர்ஷி ப்ரும்ம ஸ்வரூபமாக அறிந்துள்ளார்.

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

ஆகவே ஒவ்வொரு உபாஸனத்திலும் महः எனும் வ்யாஹ்ருதி மிகவும் ச்ரேஷ்டமானது. ப்ரஹ்ம ஸ்வரூபமாக த்யானிக்க வேண்டும்.

2. தேவ த்ருஷ்டி உபாஸனம்,

भूः	எனும்	வ்யாஹ்றுதியில்	அக்னி	தேவரையும்
भुव!	,,	,,	வாயு	,,
सुवः	,,	,,	ஆதித்ய	,,
महः	,,	,,	சந்த்ர	,,

தியானித்து உபாஸனம் செய்ய வேண்டும். சந்த்ரனுல்தான் சந்த்ர மண்டலத்தைச் சுற்றிலும் உள்ள நக்ஷத்ரங்கள் விசேஷமாக விளங்குகின்றன,

வேத த்ருஷ்டி உபாஸனம்

भूः	எனும்	வ்யாஹ்ருதியில்	ரிக்	வேதத்தையும்
भुवः	,,	,,	ஸாம	,,
सुवः	,,	,,	யஜுர்	,,
महः	,,	,,	வேத ஸாரமான ப்ரணவ	

ஸ்வரூபமான ப்ருஹ்ம ஸ்வரூபத்தையும் தியானித்து உபாஸனம் செய்ய வேண்டும். ப்ரணவோச்சாரண பூர்வமாகத்தான் எல்லா வேதங்களும் அத்யயனம் செய்யப்படுகின்றன.

ப்ராண த்ருஷ்டி உபாஸனம் — भूः எனும் வ்யாஹ்ருதியால் ப்ராணனையும், भुवः எனும்

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

வ்யாஹ்ருதியால் அபானனையும், ஸுவ: எனும் வ்யாஹ்ருதியால் வ்யானனையும், மஹ: எனும் வ்யாஹ்ருதியால் அன்ன தேவதையையும் த்யானித்து உபாஸித்தல் வேண்டும். அன்னத்தினுல் தானே, ப்ராணுதிகள் த்ருப்தியை (புஷ்டியை) பெறுகின்றன, இந்த நான்குவித உபாஸனங்களைச் செய்பவர் உயர்ந்த ப்ரும்ஹ ஸ்வரூபத்தை உபாஸிப்பவர்களாக ஆகிவிடுவதால் இவர்களை இந்த்ராதி தேவர்களால் பூஜிக்கப்படுவார்கள். இந்த உபாஸனங்களில் மஹ: எனும் வ்யாஹ்ருதி ப்ருஹ்ம ஸ்வரூபம். ஆத்ம ஸ்வரூபமானது அவ்யவிஸ்வரூபம்—மற்ற தேவதைகள் அவயங்களாவர். இந்த நான்குவித உபாஸனங்கள் அங்கோபாஸானங்கள்.

அனுவாகம் 6

सयएषोऽन्तर्हृदय आकाशः

இந்த அனுவாகத்தில் அங்கிய உபாஸனம் ப்ரதானம் உபதேசிக்கப்படுகிறது. सयएषोन्तर्हृदय आकाशः முதலில் உபாஸ்ய ஸ்வரூபம் கூறப்படுகிறது. (உபாஸ்யர்..... . . உபாஸிக்கப்படுபவர்) ஹ்ருதய புண்டரீகத்தின் நடுவில் அங்குஷ்ட பரிமிதமான (அவரவர்களின் கட்டைவிரல் அளவுள்ள) ஆகாசம் உள்ளது. இதற்கு ஹ்ருதயாகாசம் என்று பெயர். இதில் பரமாத்மா ஜ்யோதி ஸ்வரூபியாய் ப்ரகாசித்துக் கொண்டிருக்கிறுர். மஹான்கள்

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

ஏகாக்ர நிலையில் ஸமாதியினால் அந்த பரமாத்மாவை ஸாக்ஷாத்கரித்து அபரோக்ஷானந்த அனுபவ நிலையை அடைகிறார்கள். ஸரி. அந்த ஸாக்ஷாத்காரத்தைப் பெறுவதற்கு மார்க்கம் என்ன? அதை உபநிஷத் வாக்யம் உபதேசிக்கிறது.

முகத்தில் இரண்டு தாலு ப்ரதேசத்திற்கு நடுவில் மேல் அண்ணத்தில் உள்நாக்கு என்று கூறப்படும் உறுப்பிற்கு இந்த்ரயோனி என்று பெயர். பரமாத்மாவின் ஸ்தானம் பரமாத்மாவின் ஸமீபத்தைத் தெரிந்து கொள்வதற்குரிய இடம். இதனின் ஸமீபமாகத்தான் ஸுஷும்நா நாடி ப்ருஹ்மரந்த்ரத்தை நோக்கிச் செல்லுகிறது. ஸாதகன் தன்னுடைய பரிபக்வமடைந்த சித்தத்தை இந்த நாடியில் நிரந்தர அப்யாஸத்தினால் செலுத்தி ப்ருஹ்ம ஸாக்ஷாத்காரத்தை பெறுகிறான். இவ்விதம் பரமாத்மாவை உபாஸிப்பவனுக்கு பலம் கூறப்படுகிறது.

भूरित्यग्नौ प्रतितिष्ठति.... शान्तिसमृद्ध ममृतम् ।

மூன்று வ்யாஹ்ருதிகளின் உபாஸனத்தினால் முறையே அக்னியில் ப்ரதிஷ்டையையும் வாயுவிலும், ஆதித்யனிலும் ப்ரதிஷ்டையை அடைகிறான். அதாவது அந்தந்த தேவதைகளின் ஐஸ்வர்யாதிகளைப் பெற்று விளங்குகிறான். உத்தமமான மஹாவ்யாஹ்ருதியின் உபாஸனை

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

யின் பெருமையால் (ஹிரண்யகர்ப்ப) விராட் ஸ்வரூபத்தைப் பெற்று அவித்யா நிவ்ருத்தித் வாரா நித்யையையும் ஆனந்த ஸ்வரூபாத்மாகமா யும் ஆகாசம் போல் ஸர்வ வ்யாபகமாயுள்ள ஸ்வராஜ்ய ஸித்தியை அதாவது மோக்ஷ ஸாம் ராஜ்ய ஸித்தியைப் பெறுகிருன். (ஜனன, மரண சூழலில் இவன் சிக்கமாட்டான்) இந்த உபா ஸனையை அவிச்சின்னமாய் உபாஸிப்பதில் இப்படி உபாஸிக்க வேண்டும். நான் முன்பு சொல்லப்பட்ட அங்க தேவதைகளுக்கெல்லாம் ப்ரதானமாயும், ப்ரேரகராகவும் உள்ளவரும் ஆத்மாராமனுகவும், நித்யனுகவும் (த்ரிகாலா பாத்யனுகவும்) ஆனந்த ஸ்வரூபியாயும் சாந்தி நிரம்பியவருமான பரமாத்ம ஸ்ரூபியாக இருக்கி றேன். (अहंब्रह्मास्मि) இப்படி த்யானத்துடன் உபா ஸித்து வந்தால் துக்கத்திற்கு மூலமான அவித்யா நிவ்ருத்தித்வாரா அபரோக்ஷ ப்ரஹ்மானந்தானு பவம் பெற்று க்ருத க்ருத்யனுகி விடுகிருன்.

இந்த உபாஸனத்தைச் செய்யும்படி வேத மாதா உபதேசிக்கிருள். யாரைப் பார்த்து? ப்ராசீன யோக்யனுன ஜீவனைப் பார்த்து, ப்ராசீன யோக்யன் யார்? உபநிஷத் பாகத்திற்கு முன்பு கூறப்பட்ட கர்ம காண்டங்களில் அனுஷ்டிக்க வேண்டியவைகளாக உபதேசிக்கப்பட்ட நித்ய கர்மாக்களை நன்கு அனுஷ்டித்து சித்த சுத்தி யைப் பெற்று வைராக்ய ஸம்பன்னனுன ஜீவனுன சிஷ்யனைப் பார்த்து உபதேசம் செய்யப்படுகிறது.

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

அநுவாகம் 7

पृथिव्यन्तरीक्षन्द्यौः

ஆருவது அனுவாகத்தில் மனோமயன் முதலிய குணவிசிஷ்ட பரமாத்மாவினுடைய உபாஸநம் கூறப்பட்டுள்ளது. ஆனல் இந்த ஆத்மா கண்ணுக்குப் புலப்படாதவராக இருப்ப தால் மந்தாதிகாரிகளுக்கு இந்த உபாஸனம் சுலப மில்லை. அதனால் இந்த ஏழாவது அனுவாகத்தில் சக்ஷுர்கோசரமான (கண்ணுக்குப் புலப்படுகிற) வஸ்துக்களிலேயே (ப்ரஹ்மோபாஸனம்) பரமாத் மாவின் உபாஸனம் உபதேசிக்கப் பட்டிருக்கிறது, நிகில ப்ரபஞ்சமும் ஆறு ஐந்து பதார்த்தங்களில் ஸமூஹங்களால் விளங்கி வருகிறது. அதாவது இவைகள்தான் ப்ரபஞ்சம் முழுவதும் ஒவ்வொரு ஐந்து பதார்த்தங்களுக்கும் "பாங்தம்" என்று பெயர். இவ்விதம் 6 பாங்தங்கள் ஆதிபூத பாங் தங்கள் மூன்று ப்ருதிவீ முதலிய பூதவஸ்துக் களைக் கொண்டது. தேஹத்திற்கு அப்பாற்பட் டவை. அத்யாத்ம பாங்தங்கள் மூன்று தேஹ ஸம் பந்தமானவை ஆகவே இந்த ப்ரபஞ்சம் முழுவதும் முப்பது பதார்த்தங்களின் கார்யம்தான். ஆதிபூத பஞ்சகம் மூன்றுகளின் விபரம் 1. லோகபஞ்சகம் ப்ருதிவீ, அந்தரிக்ஷம் தேவலோகம், திக்குகள் அவாந்தர திக்குகள். 2. அக்னி முதலிய தேவதா பஞ்சகம்: அக்னி, வாயு, ஆதித்யன், சந்த்ரன்,

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

நக்ஷத்ரங்கள். த்ரவ்ய பஞ்சகம். ஜலம், ஒஷதி கள், வநஸ்பதிகள், ஆகாசம், ஆத்மா. (ஸமஷ்டி ரூபனான விராட் புருஷன்) அத்யாத்ம பாங்தம் தேஹ ஸம்பந்தமானவை ப்ராணாதி பஞ்சகம், இந்த்ரிய பஞ்சகம், ப்ராணன், வ்யானன். அபானன், உதானன் ஸமானன். சக்ஷு: (கண்) ச்ரோத்ரம், மனது வாக், த்வக் தாது பஞ்சகம். சர்மா, மாம்ஸம், ஸ்நாவா, அஸ்தி மஜ்ஜா, இவ் வளவும் பரமாத்ம ஸ்வரூபந்தான் பரமாத்ம ஸ்வரூபத்தைத் தவிர்த்து ஒன்றுமே இல்லை யல்லவா?

ने ह नाना स्तिकिंचन) நான் இந்த பரமாத்மாதான் अयमात्मा अहंब्रह्मास्मि இவ்விதம் உபாஸிக்க வேண்டும். உபாஸனம் என்றால் தைலதாரை போன்று அவிச் சின்னமாயும், தியான புரஸ்ஸரம் அப்யஸித்தல் இந்த உபாஸனங்களால் க்ரமமுக்தியை ஸாதகன் அடைந்து விடுகிறான். இதனால்தான் உபாஸனங் கள் மோக்ஷ ப்ராப்திக்கு அந்தரங்க ஸாதனங்கள் என்று ஸித்தாந்தம் செய்யப்பட்டுள்ளது. இந்த உபாஸனங்களை உபாஸனத்திற்குப் பலமாகக் கூறப்பட்ட ப்ரதிஷ்டை முதலியவைகளை விரும் பாமல் நிஷ்காமனையாய் உபாஸித்தால் சீக்ரம் ப்ரஹ்ம ஸாக்ஷாத்காரம் கிடைத்துவிடும். ஏற் பட்டு முக்தி நிலையைப் பெற்றுவிடுகிறான். 8வது அனுவாகத்தில் உபாஸனங்களுக்குள் முக்யமான ப்ரணவ ப்ரஹ்மோபாஸனம் ஒங்காரோபாஸனம் உபதேசிக்கப்படுகிறது.

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

ओमितिब्रह्म..... ब्रह्मैवोपाप्नोति।

ஓம் எனும் ப்ரணவாக்ஷரத்திற்கு பரப்ருஹ்ம ஸ்வரூபந்தான் அர்த்தம். பரப்ருஹ்மமானது நாமரஹிதம் என்று கூறப்பட்டாலும் ஸ்ரீபதஞ்ஜலி பகவான் யோகஸூத்ரத்தில் तस्य वाचकः प्रणवः என்று அருளியிருக்கிறார். ப்ரணவத்தை வாசக சப்தமாகவே சொல்லியிருக்கிறார். ஆகவே இந்த ப்ரணவோபாஸனம் நிர்குண உபாஸனந்தான். அதாவது சுத்த ப்ரஹ்மோபாஸனம் ப்ரபஞ்சம் முழுவதும் ப்ரணவப்ரஹ்ம ஸ்வரூபமே ப்ரபஞ்சம் இரண்டு விதம்.

1. சப்தப்ரபஞ்சம், 2) அர்த்த ப்ரபஞ்சம். சப்த ப்ரபஞ்சம் முழுவதையும் (எல்லா க்ரந்தங்களையும்) ப்ரணவம் எனும் ஓங்காரம் வ்யாபித்துள்ளது. எப்படி? அச்வத்த பர்ணம் (அரசு இலை) முதலிய இலைகளில் உள்ள நடு நரம்பிற்கு சங்கு என்பது பெயர். சங்கு(தான்) இலை முழுவதையும் வ்யாபித்திருக்கும். நடு நரம்பை பிரித்து எடுத்து விட்டால் இலையே இல்லாமல் போய்விடும். அதாவது இலைபாகம் முழுவதும் இந்த சங்குவினால் நிலைத்துள்ளது. இதுபோல் ஸகல சப்தராசிகளும் ஓங்காரத்தினால்தான் விளங்குகின்றன. ஓங்காரத்தில் முதல் அக்ஷரம் "அகாரம்". ஆகவே அகாரம் மிகவும் ப்ரதானமானது. அதனால்தான் கீதையில் ஸ்ரீக்ருஷ்ணபகவான் "अक्षराणां अकारोऽस्मि" என்று

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

உபதேசிக்கிருர். இதை ப்ரமாணமாகக் கொண்டு தான் அகரமுதல் எழுத்தெல்லாம் என திருவள்ளுவ நாயனுர் திருக்குறளில் கூறியுள்ளார். இவ்விதமே அர்த்தப்ரபஞ்சமான உலகங்களை யெல்லாம் ஓங்காரார்தமான (ஓங்காரவாச்யனுன) பரமாத்மா வ்யாபித்துள்ளார். மேலும் ஓங்காரத்தின் மஹிமை கூறப்படுகிறது. எல்லா யக்ஞங்களிலும் அந்தந்த க்ரியைகளைச் செய்வதற்கு முதலில் ஓங்காரத்தை உச்சரித்துத்தான் ஆரம்பிக்கப்படுகிறது. வேதாத்யயனம், ப்ரஹ்மயக்ஞம் முதலியவை ஓங்கார பூர்வமாகத்தான் செய்யப்படுகிறது. இந்த ப்ரணவத்தை உச்சரித்துக் கொண்டு, இந்த உபாஸனத்திஞல் நான் ப்ரஹ்ம ஸ்வரூபத்தைப் பற்றப்போகிறேன் என்ற பாவத்தோடு உபாஸனே செய்கிருன். அதனுல் ப்ரஹ்ம ஸாக்ஷாத்காரத்தை அடைந்து விடுகிருன்.

அனுவாகம் 9

ऋतञ्च स्वाध्याय प्रवचने च।

எட்டாவது அனுவாகத்தில் க்ரம முக்திக்கு ஸாதனமான ப்ரணவோபாஸனம் உபதேசிக்கப் பட்டுள்ளது. இந்த நிலையில் ச்ருதி ஸ்மிருதிகளில் விதிக்கப்பட்ட நித்ய கர்மாக்கள் அவசியம் இல்லையோ என்று ஸம்சயம் ஏற்படலாம். இவை வ்யர்த்தம் என்றும் தோன்ற இடம் ஏற்படலாம்.

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

அப்படி ஏற்படக் கூடாது. உபாஸனத்துடன் நித்ய கர்மாக்களும் அவசியம் அனுஷ்டிக்கப்பட வேண்டும் என்பதற்காக இந்த அனுவாகம் உபதேசிக்கப்படுகிறது. இவ்விடம் ஓர் சிறுகுறிப்பு. க்ரமமுக்தி ஏற்பட்டு அவித்யாலேசமும் நிவ்ருத்தியாயினும்,

यस्साक्षात् अपो क्षादवदैवभवति।

எனும் ரீதியில் பரமாத்மானுபவத்திலேயே நிலைத்து விடுகிறான். ''த்ரிபுடி'' யே நீங்கிவிடுகிறது. உபாஸகன், உபாஸனம், உபாஸ்யன் இம் மூன்றும் நீங்கி விடுகிறது. ஆனால் உபாஸனு காலத்தில் (அப்யாஸ காலத்தில்) த்ரிபுடி உள்ளது. இந்த நிலையில் நித்ய கர்மானுஷ்டானம் தேவையில்லையோ என்று ஆலஸ்யம், அலக்ஷ்யம் ஏற்படக்கூடும். அப்படி ஏற்படித்திக்கொள்ளக் கூடாது என்பதற்காக இந்த அனுவாகம்.

ऋतञ्च स्वाध्यय प्रवचनेच।

ருதத்தையும், (ऋतं) வேதாத்யயனத்தையும் ப்ரஹ்ம யக்ஞத்தையும், வேதாத்யாபனத்தையும் (அத்யாபனம் வேதத்தை சிஷ்யர்களுக்குச் சொல்லிக் கொடுத்தல்) (கற்பித்தல்) இவைகளை அவசியம் அனுஷ்டிக்க வேண்டும் என்பது தாத்பர்யம். மேல்வரும் ஒவ்வொரு பர்யாயத்திலும் வாக்யங்களிலும் स्वाध्यायप्रवचनेच என்பது திரும்பத் திரும்பக் கூறப்படுவது ஸ்வாத்யாய ப்ரவசனம் என்பது

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

உபதேசிக்கிறார். இதை ப்ரமாணமாகக் கொண்டு தான் அகரமுதல் எழுத்தெல்லாம் என திருவள்ளுவ நாயனார் திருக்குறளில் கூறியுள்ளார். இவ்விதமே அர்த்தப்ரபஞ்சமான உலகங்களையெல்லாம் ஓங்காரார்தமான (ஓங்காரவாச்யனான) பரமாத்மா வ்யாபித்துள்ளார். மேலும் ஓங்காரத்தின் மஹிமை கூறப்படுகிறது. எல்லா யக்ஞங்களிலும் அந்தந்த க்ரியைகளைச் செய்வதற்கு முதலில் ஓங்காரத்தை உச்சரித்துத்தான் ஆரம்பிக்கப்படுகிறது. வேதாத்யயனம், ப்ரஹ்மயக்ஞம் முதலியவை ஓங்கார பூர்வமாகத்தான் செய்யப்படுகிறது. இந்த ப்ரணவத்தை உச்சரித்துக் கொண்டு, இந்த உபாஸனத்தினால் நான் ப்ரஹ்ம ஸ்வரூபத்தைப் பற்றப்போகிறேன் என்ற பாவத்தோடு உபாஸனை செய்கிறான். அதனால் ப்ரஹ்ம ஸாக்ஷாத்காரத்தை அடைந்து விடுகிறான்.

அனுவாகம் 9

ऋतञ्च स्वाध्याय प्रवचनेच।

எட்டாவது அனுவாகத்தில் க்ரம முக்திக்கு ஸாதனமான ப்ரணவோபாஸனம் உபதேசிக்கப்பட்டுள்ளது. இந்த நிலையில் ச்ருதி ஸ்மிருதிகளில் விதிக்கப்பட்ட நித்ய கர்மாக்கள் அவசியம் இல்லையோ என்று ஸம்சயம் ஏற்படலாம். இவை வ்யர்த்தம் என்றும் தோன்ற இடம் ஏற்படலாம்.

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

அப்படி ஏற்படக் கூடாது. உபாஸனத்துடன் நித்ய கர்மாக்களும் அவசியம் அனுஷ்டிக்கப்பட வேண்டும் என்பதற்காக இந்த அனுவாகம் உப தேசிக்கப்படுகிறது. இவ்விடம் ஓர் சிறுகுறிப்பு. க்ரமமுக்தி ஏற்பட்டு அவித்யாலேசமும் நிவ் ருத்தியாயினும்,

यस्साक्षात् अपो क्षादवदैवभवति।

எனும் ரீதியில் பரமாத்மானுபவத்திலேயே நிலைத்து விடுகிறான். "த்ரிபுடி" யே நீங்கிவிடு கிறது. உபாஸகன், உபாஸனம், உபாஸ்யன் இம் மூன்றும் நீங்கி விடுகிறது. ஆனால் உபாஸனு காலத்தில் (அப்யாஸ காலத்தில்) த்ரிபுடி உள்ளது. இந்த நிலையில் நித்ய கர்மானுஷ்டானம் தேவையில்லையோ என்று ஆலஸ்யம், அலக்ஷ்யம் ஏற்படக்கூடும். அப்படி ஏற்படித்திக்கொள்ளக் கூடாது என்பதற்காக இந்த அனுவாகம்.

ऋतञ्च स्वाध्यय प्रवचनेच।

ருதத்தையும், (ऋतं) வேதாத்யயனத்தையும் ப்ரஹ்ம யக்ஞத்தையும், வேதாத்யாபனத்தையும் (அத்யாபனம் வேதத்தை சிஷ்யர்களுக்குச் சொல் லிக் கொடுத்தல்) (கற்பித்தல்) இவைகளை அவசி யம் அனுஷ்டிக்க வேண்டும் என்பது தாத்பர்யம். மேல்வரும் ஒவ்வொரு பர்யாயத்திலும் வாக்யங் களிலும் स्वाध्यायप्रवचनेच என்பது திரும்பத் திரும்பக் கூறப்படுவது ஸ்வாத்யாய ப்ரவசனம் என்பது

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

முதலியவை மிகவும் அவசியம் என்பதைத் தெரிவிப்பதற்காக. ऋतं நடந்தவைகளைச் சொல்லும் பொழுது யதார்த்தத்தைக் கூறுமுன்பு எவ்வாறு சப்தங்களை உபயோகிக்க வேண்டும் என்று பர்யாலோசனம் செய்து கொள்ளுதல் இதோடு ஸ்வாத்யாய ப்ரவசனத்தையும் செய்து வர வேண்டும். இதன் தாத்பர்யம் முதல் பாராவில் கூறப்பட்டுள்ளதைக் கவனித்துக் கொள்ளவும். सत्यं உண்மையே பேசுதல், இதோடு ஸ்வாத் ப்ரவசனம் இவைகளையும் அனுஷ்டித்து வர வேண்டும்.

तपश्च + प्रवचने च தபஸ்ஸையும் செய்ய வேண்டும். தபஸ் = 1 க்ருச்ரம்—சாந்த்ராயணம் முதலியவை ஸாக்ஷாத்தாக க்ருச்ராசரணம் செய்ய முடியாவிட்டால் அதற்குறிய கோமூல்ய தானம் செய்தல், உபவாஸம் தீர்தாடனம் முதலியவை இதில் அடங்கும். दमश्च स्वाध्याय + प्रवचने च தமம்—என்றால் கண் முதலிய பாஹ்யேந்திரியங்களை அதனதன் விஷயங்களில் தாறுமாறாக செலுத்தாமல் அடக்கியாள்வது. शमश्च स्वाध्याय + प्रवचने च சமம் என்பது மனதை அடக்கியாளுதல். 2. अग्नय श्च + च அக்னி ஸந்தானம் ஆதானம் செய்து கொண்டு அக்னிகளை தார்யமாக ரக்ஷித்து வருதல் अग्निहोत्रं च + च ஸாயங்காலத்திலும், ப்ராத: காலத்திலும் ஔபாஸனம் அக்னிஹோத்ரம் இவைகளை அனுஷ்டித்து வருதல்.

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

अतिथयश्च + च—அதிதிகளை பூஜித்தல். मानुषं च + च விவாஹ சுப கார்யங்களில் ஸுமங்கலி பூஜனம் முதலியவை (ஸுமங்கலி ப்ரார்த்தனை மங்களப் பெண்டுகள்) प्रजा च + प्रवचने च கர்ப்பாதானாதி ஸம்ஸ்காரங்கள் கர்ப்பாதான, பும்ஸுவன ஸீமந்தாதிகள் प्रजनश्च + प्रवचने च ருதுகமனம் முதலியது. प्रजातिश्च प्रवचने च சுருதி, ஸம்ருதிகளால் விதிக்கப் பட்ட வர்ணாச்ரம தர்மங்களை அனுஷ்டிப்பது. இவ்விதம் சொல்லப்பட்ட ஒவ்வொரு கர்மாக்களை யும் அனுஷ்டிப்பதோடு ஸ்வாத்யாயம்—அத்யய னம், ப்ரவசனம், வித்யாப்யாஸம் செய்வித்தல், இதையும் ஒவ்வொன்றுடனும் சேர்த்துக் கொள்ள வேண்டும் என்பதற்காக ஒவ்வொரு வாக்யத்தி லும் चकार எனும் பதம் உபதேசிக்கப்பட்டுள்ளது. அதிகாரி தாரதம்யத்தை அனுஸரித்து அக்னி ஹோத்ராதி கர்மாக்கள் சிலருக்கு இருக்கலாம். சிலருக்கு இல்லாமையும் இருக்கலாம். ஆனால் ஸ்வாத்யாயம் ப்ரவசனம் இவை எல்லோராலும் அனுஷ்டிக்கப்படவேண்டும் என்பதற்காகத்தான் ஒவ்வொரு வாக்யத்திலும் இவை உபதேசிக்கப் பட்டுள்ளன.

सत्यमिति सत्यवचा राथीतरः ஸத்யம் என்பது எது எனும் விஷயம் பற்றி பல மஹர்ஷிகளுடைய அபிப்ராயத்தைக் கூறி எது ப்ரசஸ்தம் என்பது ஸித்தாந்தம் செய்யப்படுகிறது. ரதீதர மஹர்ஷி யின் புத்ரர் ராதீதரர் அவர் எப்பொழுதும்.

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

ஸத்யமே பேசுவார். ஆகையால் அவருக்கு ஸத்ய வசஸ் என்று பெயர் ப்ரஸித்தம். ஸத்யம் பேசுவதே (உண்மை பேசுவதே) உத்தம கர்மா என்பது இவர் மதம் (அபிப்ராயம்).

तपइति तपोनित्य: पौरुशिष्टि: ।

புருசிஷ்ட மஹர்ஷியின், புத்ரர்-பௌருசிஷ்டி- இவர் எப்பொழுதும் தவம் புரிந்து கொண்டிருப் பார். அதனால் இவருக்கு 'தபோநித்யர்'' என்ற பெயர் பிரஸித்திமாகி விட்டது. ஆகவே, தபஸ் தான் உத்தமகர்மா என்பது இவர் ஸித்தாந்தம். முத்கல மஹரிஷியின் புத்ரர் மௌத்கல்யர். இவர் ஸதாகாலமும் ஸ்வாத்யாயம் (அத்யாபனம்) ப்ரவசனம் (கற்பித்தல்) என்னும் கர்மாக்களை செய்து கொண்டு ஸந்தோஷத்துடன், துக்கமற்ற வராக இருந்ததால், இவருக்கு, ''நாகர்'' என்ற பெயர் (''கம்'' என்றால் ஸுகம் என்று அர்த்தம். ''அகம்'' என்றால் துக்கம். न-अक=नाकम् துக்க மற்றது. அதாவது ஸுகம்) இந்த நாகருடைய ஸித்தாந்தம் ஸ்வாத்யாயம், ப்ரவசனம் இவை தான் உத்தம கர்மா, மேலான தபஸ்.

तद्धितपस्तद्धितप: ।

என்று இரண்டு தடவை உபதேசிக்கப் பட்டது. ''ப்ரம்ஹயக்ஞம், நித்யஸ்வாத்யாயம்'' ப்ரவசனம் எனும் வேதாத்யயனம், வேதாத்யா

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

பனம், இவை மிகவும் உத்தமமான கர்மாக்கள் என்பதை (தலைக்கட்டுவதற்காக) உறுதி ஸித்தாந்தம் செய்வதற்காக

"तद्धितपः तद्धितपः"

என்று இரண்டு முறை உபதேசிக்கப்பட்டுள்ளது.

10வது அநுவாகம்

अहं वृक्षस्य रेरिवा ॥

9வது அநுவாகத்தில், ப்ரஹ்மோபாஸனத்தோடு, ச்ரௌத ஸ்மார்த்த கர்மாக்களும் அனுஷ்டிக்கப்படல் வேண்டும் என்றும் அந்த ஸந்தர்ப்பத்தில் "நித்ய ஸ்வாத்யாயம்" எனும் ப்ரம்ஹயக்ஞம் மிகவும் உத்தமமான தபஸ் என்றும் நன்கு ப்ரதிபாதனம் செய்யப்பட்டுள்ளது. ப்ரம்ஹயக்ஞம் என்பது பிரதிதினம் ப்ராத: காலத்தில் ஔபாஸனம், அக்னிஹோத்ரம் நடந்ததும் ஸங்கல்பம் செய்து கொண்டு, ஒரு ப்ரச்னம் அல்லது யதாசக்தி துடர்ச்சியாக முதல் ப்ரச்னம் இரண்டாம் ப்ரச்னம் எனும் க்ரமத்தில் பாராயணம் செய்து வரவேண்டும். பூர்வாங்க-உத்தராங்கங்களுடன் இதற்கு பல விசேஷம் நிரம்ப சொல்லப்பட்டுள்ளது. ஆரண்யகம் இரண்டாம் ப்ரச்னத்தில் மிகவும் ச்ரத்தை இருக்கிறது. ஆனால் மந்த புத்தியுள்ளவனாக இருக்கிறேன். வேதாத்

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

யயனம் எனக்கு ப்ராப்தம் ஆகவில்லை. என்ன செய்வது என்று வருத்தப் படுபவர்களுடைய, க்ஷேமத்திற்காக இந்த அநுவாகம் ஆறு வாக்யங் களை மட்டும் கொண்டது. இதை ப்ரதி தினம் ப்ரம்ஹயக்ஞ காலத்தில் பாராயணம் செய்து வந்தாலும் ப்ரம்ஹயக்ஞானுஷ்டான பூர்ண பலம் கிடைத்துவிடும் என்பதும் ஸம்ப்ரதாய ஸித்தாந் தம். மேலும் க்ரமமாக ப்ரஹ்மயக்ஞ ப்ரச்னம் சொல்பவர்கள் கூட ப்ரச்னம் முடிந்ததும் சதுர் ஹோத்ரு மந்த்ரங்களையும் चित्तिस्रुक् முதல் वाग्घोता வரையில் பாராயணம் செய்து புருஷஸூக்தம் முதல் அனுவாகத்தையும் பாராயணம் செய்து கடைசியில் இந்த अहं वृक्षस्यरेरिवा என்றும் ஆறு வாக்யங்களையும் பாராயணம் செய்து உத்தராங் கத்தை அனுஷ்டிப்பது ப்ராசீன ஸம்பரதாய ஸித்தம். அவ்வளவு பெருமையுள்ளது இந்த மந்த்ரம்

अहं वृक्षस्यरेरिवा...... इति त्रिशङ्कोर्वेदानुवचनम् ।

த்ரிசங்கு எனும் மஹர்ஷி வைராக்யாதிகளைப் பெற்று உபாஸனாதிகளை அனுஷ்டித்து ஆத்ம ஞானத்தை அடைந்து ப்ரஹ்ம ஸாக்ஷாத்காராநந் தானு பாவத்துடன் நிர்பயமாப்த அபயஸ்தானத் தில் ப்ரகாசித்துக் கொண்டு இந்த அனுபவத்தை இந்த அனுவாகத்தை உச்சரித்துக் கொண்டு

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

ஸஞ்சரிக்கிருர். ஆகவே, இந்த மந்த்ரத்தை ப்ரதி தினம் பாராயணம் செய்தால் இந்த நிலே எல்லோருக்கும் ப்ராப்தமாகிவிடும் என்பது தாத்பர்யம். மந்த்ரார்த்தம்-முமுக்ஷுவான நான் விஷய வைராக்யமெனும், த்ருடமான சாஸ்த்ரத்திஞல் ஸம்ஸார வ்ருக்ஷத்தை வெட்டி வீழ்த்தும் ஸாமர்த்ய முள்ளவஞக ஆகவேண்டும். ஸம்ஸாரமெனும் வ்ருக்ஷம் வெட்டி வீழ்த்தப்பட்ட அளவில் மோக்ஷ விஷயமான என்னுடைய கீர்த்தியானது த்ரிசிகரம் போன்று ஊர்த்வமான தேவலோகங்களிலும் வ்யாபிக்கும். தேவர்கள்கூட என்னுடைய மோக்ஷத்திற்கு இடையூறு செய்ய வல்லவர்களாக மாட்டார்கள். மேலும் ஸூர்ய ப்கவானிடம் அத்யந்த சுத்தமான அம்ருதம் நிறைந்துள்ளது போன்று நான் ஊர்த்வ பவித்ரஞக இருக்கவேணும். அதாவது மிகவும் பரிசுத்தமான ஆத்மஞானனந்தம் நிரம்பியவஞக இருக்க வேண்டும். அதற்குரிய தெய்விக பலம் பெற்று ப்ரஹ்ம ஞானத்தை ப்ரதிபாதனம் செய்யும் க்ரந்தங்களே நன்கு தாரணம் செய்யும் மேதையுடன் ஞாஞப்யாஸம் செய்து ப்ரஹ்மாநந்தாம்ருதத்தில் மக்நனாகி பரமபுருஷார்த்தமான மோக்ஷ ஸாம்ராஜ்யத்தை அடைய வேண்டும்.

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

அனுவாகம்—11

वेदमनूच्याचार्यः।

10வது அனுவாகத்தில் மந்த புத்தி காரண மாக வேதம் முழுவதும் அத்யயனம் செய்து நித்ய ப்ரஹ்மயக்ஞம் செய்ய முடியாதவர்களுக் கும் நித்ய ப்ரஹ்மயக்ஞ பலம் கிடைக்க வேணும் என்ற கருணையால் வேத மாதா 6 வாக்யங்களே உள்ள மஹா மந்த்ரத்தை உபதேசித்து அருளி யுள்ளாள். அதற்கும் முன்னுள்ள ऋतं च எனும் அனுவாகத்தால் நித்யகர்மாக்களோடு கூடிய உபாஸனங்களை உபதேசித்து அவைகளை அனுஷ் டித்து க்ரமமுக்தி ப்ராப்திக்கும் அனுக்ரஹம் செய்திருக்கிருள்.

இந்த 11வது அனுவாகத்தில் கேவல கர்மானுஷ் டானமும் கூட சித்த சுத்தி த்வாரா மோக்ஷஸா தனமாகும் என்று உபதேசிக்கப் படுகிறது. மேலும் வேதாத்யயனம் பூர்த்தியாகும் ஸமயத் தில் அதாவது சிறிது பாகமே பாக்கியுள்ள நிலையில் ஆசார்யாள் சிஷ்யர்களுக்கு குருகுலத்தி லிருந்து சொந்த க்ருஹத்திற்குச் சென்றதும் என்ன என்ன செய்ய வேண்டும், எவ்விதம் நடந்துக் கொள்ள வேண்டும் என்பனவற்றை உபதேசிக்க வேண்டியது மிகவும் அவசியமானது ஆசார்யனுடைய கடமையாகும். சரி எவ்விதம் உபதேசம் அமைய வேண்டும்; அதையும் வேத மாதா உபதேசிக்கிருள்.

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

वेदमनूच्याचार्यः.... अन्तेवासिनमनुशास्ति।

ஆசார்யன் வேதத்தை அத்யயனம் செய்து வைத்து சிஷ்யனுக்கு நன்மைதரும் உத்தமமான அனுசாஸனங்களை ஆக்ஞாரூபங்களை உபதேசம் செய்கிறார். அவையாவன:- सत्यंवद ஸத்யத்தைக் கடைபிடிக்க வேண்டும், உண்மையே பேசுதல், இனிமையாகப் பேசுதல், நல்லதைப் பேசுதல், அஹிம்ஸை, அஸ்தேயம், பிறர் பொருளைக் கவரா திருத்தல். धर्मंचर தர்மத்தைச் செய்ய வேண்டும். தர்மம் இரண்டு விதம். ச்ரௌத கர்மாக்கள், ஸ்மார்த்த கர்மாக்கள். இவைகளை அனுஷ்டிக்க வேண்டும். வேதாத்யயன விஷயத்தில் அச்ரத் தையாய் இருந்து விடலாகாது. ஆலஸ்யாதி களால் மறந்துவிடக் கூடாது.

स्वाध्यायान्माप्रमदः.... आचार्याय प्रियन्धनमाहृत्य प्रजा तन्तुं माव्यवच्छेत्सीः।

அத்யயனம் பூர்த்தியானதும் ஆசார்யனுக்கு பிரியமான குரு தக்ஷிணையை ஸமர்ப்பித்து, சொந்த க்ருஹம் சென்று விவாஹம் செய்து கொண்டு, புத்ர பௌத்ர பரம்பரையாக வேத ஸந்ததியைப் பாதுகாக்க வேண்டும். சந்ததியில் அனுஸ்யூதமாக தொடர்புக்கு தடை ஏற்படுத்த லாகாது. ஸத் விஷயத்திலும், தர்ம விஷயத்திலும்

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

सत्यान्न प्रमदितव्यम् ப்ரமாதத்தைச் செய்யக் கூடாது.
धर्मान्नप्रमदितव्यम् எந்தக் காரணத்திலும் இவ்விரண்
டையும் அனுஷ்டிக்காமல் இருந்து விடாதே.
कुशलान्नप्रमदितव्यम् க்ஷேமத்தை அளிக்கக் கூடிய
ஆயுஷ்ய ஹோமாதிகள் வைத்யம் இவைகளையும்
அனுஷ்டிக்க வேண்டும்.

भूत्यैनप्रमदितव्यम्।

தனதான்யாதி அபிவிருத்திக்குக் காரணமான வைதிககர்மாக்கள் லௌகிக யத்னங்கள் விஷயத்தில் ப்ரமாதத்தைச் (அஜாக்ரதை) செய்யக் கூடாது.

स्वाध्यायप्रवचनाभ्यान्नप्रमदितव्यम्।

வேதாத்யயனம், ப்ரஹ்மயக்ஞம், அத்யாபனம், வேதம் கற்பித்தல் இந்த விஷயத்தில் ப்ரமாதத்தைச் செய்யக்கூடாது.

मातृदेवोभव। पितृदेवोभव। आचार्यदेवो भव। अतिथि-देवोभव।

மாதா பிதாக்கள், ஆசார்யாள், அதிதிகள் இவர்களை தெய்வமாகவே பாவித்துக் கொண்டு சுஷ்ருஷை பூஜைகளைச் செய்து வரவேண்டும்.

यान्यनवद्यानिकर्माणि..... तानिसेवितव्यानि। नो इतराणि।

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

க்ஷேமம் ஐஸ்வர்யாதிகளைப் பெறுவதற்கு நித்யம் அநித்யம் என இரண்டுவித கர்மாக்கள் இருக்க லாம். இருந்தாலும் அநித்யமான குற்றமற்ற கர்மாக்களையே அனுஷ்டிக்க வேண்டும். குற்ற முள்ளவைகளை அனுஷ்டிக்க வேண்டாம்.

यान्यस्माकंसुचरितानि....नोइतराणि।

ஆசார்யாளாகிற நாங்கள் அனுஷ்டிக்கும் ஸதா சாரத்தை கடைபிடிக்க வேண்டும். ஒரு ஸமயமும் டம்பம், படாடோபம் முதலிய துராசாரமிருப்பின் அதை கடைபிடிக்கக் கூடாது.

येकेचास्मत् श्रेयांसोब्राह्मणाः.... सितव्यम्।

வயது, வித்யை, சிஷ்டாசாரம் முதலிய குணங்கள் பொருந்திய மஹான்கள் வந்தால், அவர்களுக்கு ஆஸனாதிகள் அளித்து, பாதப்ரக்ஷாளனாதிகளால் உபசரித்து, சிரமப்பரிஹாரம் செய்து வைக்க வேண்டும். அவர்கள் உன் ஆசார்யாளைக் காட்டி லும் மஹான்களாக இருக்கலாம். மேலும் அவர்கள் ஆஸனங்களில் அமர்ந்து உபதேசாதிகள் செய் யும் பொழுது கவனமாக இருந்து உபதேசத்தைப் பெறவேண்டும். பெருமூச்சுக்கூட விடுவது உசிதமில்லை. ஆகவே அவர்களுடன் வாக்குவா தத்திற்கே ப்ரஸக்தி ஏற்படக்கூடாது.

श्रद्धयादेयम्। अश्रद्धयादेयम्।

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

தானம் செய்யும் பொழுது ச்ரத்தையுடன் செய்ய வேண்டும். அச்ரத்தையுடன் செய்யக் கூடாது. श्रियादेयम् விபவத்தை அனுஸரித்துத் தானம் செய்ய வேண்டும். ह्रियादेयम् கொடுக்கும் பொழுது லஜ்ஜையோடு கொடுக்க வேண்டும். भियादेयम् சாஸ்திர விதிக்கு பயந்து கொடுக்க வேண்டும். संविदादेयम् தேசம் காலம் பாத்ரம் இவைகளைத் தெரிந்து கொண்டு தானம் செய்ய வேண்டும்.

अथयदिते कर्मविचिकित्सावावृत्त विचिकित्सावास्यात्....... तथातत्रवर्तेथा:।

ச்ரௌத கர்மாக்களிலோ ஸ்மார்த்த கர்மாக்களிலோ பரம்பராகதமான குலாசாரங்களிலோ ஸந்தேஹம் ஏற்படில், அந்த தேசத்தில், அந்த அந்த காலத்தில் அந்த குலாசாரத்தில் நன்கு அறிந்தவர்களும், அந்தந்த தர்மங்களை நன்கு அனுஷ்டிப்பவர்களும், க்ரோதம், ஆக்ரஹம் (பிடிவாதம்) அற்றவர்களும், தர்மத்தில் ஆஸக்தி உள்ளவர்களுமான உத்தம ப்ராஹ்மணர்கள் எவ்விதம் அனுஷ்டிக்கிறார்களோ, அதைத் தெரிந்து கொண்டு அவ்விதம் அனுஷ்டிப்பாயாக.

अथाभ्याख्यातेषु....... तथातेषु वर्तेथा:।

நிந்திக்கப்பட்ட அதனால் விலக்கப்பட்ட பாதகிகளான பாபிகள் விஷயத்தில் இவர்களுடன் பழக்கம் வைத்துக் கொள்ளலாமா, வேண்டாமா? எனும் விஷயத்தில் முன் கூறப்பட்ட மஹான்கள்

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

எவ்விதம் நடந்து கொள்கிறார்களோ அவ்விதம் நடந்து கொள்வாயாக இதுதான் வேதோக்தமான ஆதேசம் (கட்டளை). இதுவே ஸ்ம்ருதிகளுடைய உபதேசம். இதுதான் வேதோபநிஷத்தின் ஸாரம். இப்படி உபதேசிக்கப்பட்ட ப்ரகாரமே அனுஷ்டிக்க வேண்டும்.

12-வது அனுவாகம்.

शन्नोमित्रः......शान्तिः।

இதன் அர்த்தம் முதல் அனுவாகத்தில் கூறப்பட்டது போன்றே பவிஷ்யத்கால ப்ரயோகம். முதல் அனுவாகத்தில் वक्ष्यामि என்று இருக்கிறது. அதாவது விஷயங்களை சொல்லப் போகிறேன் என்று தாத்பர்யம். கடைசி இந்த அனுவாகத்தில் பூத கால ப்ரயோகம். अवादिषम् என்று கூறப்பட்டுள்ளது. விஷயங்கள் கூறப்பட்டுள்ளன என்பது தாத்பர்யம்.

ओं शान्तिः शान्तिः शान्तिः।

குறிப்பு: ह्रियादेयम् அதாவது ஸ்வல்பமாகக் கொடுக்கிறோமே என்று லஜ்ஜையுடன் கொடுக்க வேண்டும். अश्रद्धयादेयम् அச்ரத்தையுடன் கொடுக்கக் கூடாது. இதற்கு இந்த வாக்யத்திற்கு மற்றும் ஒரு அர்த்தத்தை மஹான்கள் கூறுவர். பலத்தில் அச்ரத்தையுடன் கொடுக்க வேண்டும். அதாவது

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

இதனால் ஐஹிக பலன், ஆமுஷ்மிக பலன் கிடைக்க வேணும் என்ற எண்ணம் இல்லாமல் கொடுக்க வேண்டும்.

ஏழாவது ப்ரச்னமான சிக்ஷாவல்லியில் (ஸாம்ஹிதீ உபநிஷத்தில்) ப்ரஹ்ம ஞானத்திற்கு, மோக்ஷ லாபத்திற்கு அந்தரங்க ஸாதனங்களான உபாஸநங்கள் உபதேசிக்கப்பட்டுள்ளன. அதுவும் வேதோக்தமான கர்மாக்களை விதிப்படி அனுஷ்டித்து சித்த சுத்தியை அடைந்து ஸாதன சதுஷ்டய ஸம்பன்னனான சிஷ்யன் ஐஹிக, ஆமுஷ்மிக ஸுகங்கள் அநித்யமென்றும் துக்கத்தோடு கூடினவை என்றும், மறுபடியும் இந்த ஸம்ஸாரத்திலேயே உழலச் செய்யும் என்றும், நன்கு பர்யாலோசித்து. ஸதாசார்யனை அடைந்து ஸம்ஸார ஸாகரோத்தாரகமான ப்ரஹ்ம ஞானத்தை உபதேசித்தருள வேண்டும் என்று பிரார்த்திக்கும் நிலையில் ஏழாவது ப்ரச்னத்தில் மேற்படி உபாஸனங்கள் உபதேசிக்கப்பட்டுள்ளன.

|| आनन्दवल्ली || ஆனந்தவல்லி

எட்டாவது ப்ரச்னம்

ஆனந்தவல்லியில் ப்ரஹ்மாபரோக்ஷ ஞான ஸாதனமான ப்ரஹ்ம ஞானம் உபதேசிக்கப்படுகிறது. முதலில் ப்ரஹ்ம ஸ்வரூப லக்ஷணமும், அதற்கு பிறகு தடஸ்த லக்ஷணமும் ப்ரபஞ்ச ஸ்ருஷ்டி ப்ரகார உபபாதனத்தின் மூலம் உப

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

தேசிக்கப்படுகிறது. இதற்கு முன்பாக இந்த ப்ரச்னத்திற்கு உரிய சாந்தி பாடம் கூறப்படு கிறது.

सहनाववतु...... शान्तिः।

சிஷ்யன், தனக்கும் தன்னுடைய ஆசார்ய னுக்கும் க்ஷேமத்தை ப்ரார்த்திக்கிறான். ஆசார்ய ப்ரஸாதத்தினால் ஆத்ம ஞானத்தை அதாவது எந்த ப்ரஹ்ம ஸ்வரூபத்தை அறியப் போகிறோமோ அந்த பரப்ரஹ்மம் நம் இருவரையும் ரக்ஷிக்க வேண்டும். ப்ரஹ்ம ஸாக்ஷாத்கார அநுபவத்தை அனுபவிக்க வேண்டும். உபதேச காலத்தில் ஆசார்யனுக்கு ஆலஸ்யம் (சோம்பேரித்தனம்) ரோகம் முதலிய ப்ரதிபந்தங்கள் ஏற்படாமலும், சிஷ்யனான எனக்கும் மேற்படி ப்ரதிபந்தங்கள் ஏற்படாமலும் உபதேசிக்கிற விஷயங்களை தாரணம் செய்வதில் ஞாபக சக்தியும் கொடுத்து இருவரையும் பரிபாலிக்க வேணும். நாங்கள் இருவ ரும் வீர்யவத்தான வித்யையை அடைவதற்கு உறிய நல்ல ப்ரயத்னத்துடன் செயல்படுவோ மாக. அதனால் ஏற்படும் தேஜஸ்ஸுடன் விளங்கு வோமாக. நாங்கள். ஒருவருக்கொருவர் த்வேஷ பாவத்தை அடையாமலிருப்போமாக. அதாவது சிஷ்யன் நல்ல முறையில் சிஶ்ரூஷாதிகளை செய்ய வில்லை என்னும் மனோபாவம் ஆசார்யனுக்கும், நல்ல முறையில் ஆசார்யன் உபதேசம் செய்ய வில்லை என்ற மனோபாவம் சிஷ்யனுக்கும் ஏற்

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

படாதவாறு வித்யாக்ரஹணம் இனிமையாக நடைபெற வேண்டுமென்று ப்ரார்த்திக்கப்படுகிறது. மும்முறை சாந்திபாடம் செய்வது ஆத்யாத்மிக, ஆதிபௌதிக, ஆதிதைவிக உபத்ரவங்கள் வராமல் இருப்பதற்காக.

அனுவாகம்—1

ब्रह्मविदाप्नोति परम्।

முதல் உபநிஷத்தின் ஸாராம்சம் முழுவதும் ஸம்க்ஷேபமாக (ஸங்கரமாக) ஸூத்ர ரூபமான வாக்யத்தினால் ஸூசனம் செய்யப்படுகிறது. சுருக்கமாக கூறப்படுகிறது. ப்ரஹ்ம ஸாக்ஷாத்காரத்தைப் பெற்றவன் நிரதிசயமான மேன்மையை அடைகிறான் என்பது இந்த வார்த்தையின் தாத்பர்யம். இது தான் ஸம்பூர்ண உபநிஷத்தின் பரம தாத்பர்யம்.

ப்ரஹ்ம ஸ்வரூபத்தின் ஸ்வரூபலக்ஷணம் உபதேசிக்கப்படுகிறது. सत्यं ज्ञानमनन्तं ब्रह्म என்ற வாக்யத்தினால் பூத காலம், வர்த்தமான காலம், பவிஷ்ய காலம் (நடந்த, நிகழ்கிற, நடக்க போகிற காலம்) எனும் முக்காலத்திலும் நிர்விகாரமாய், சாச்வதமாய் விளங்கி வருவதும், ஞான ஸ்வரூபமானதும், எல்லையற்று எங்கும் வியாபித்துள்ளது எதுவோ அதுதான் ப்ரஹ்மம். 'ப்ரஹ்மம்' என்பது ஆத்ம ஸ்வரூபந்தான் आत्मा च ब्रह्म இந்த ப்ரஹ்ம ஸ்வரூபத்தை எந்த உத்தம அதிகாரி, தன்

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

னுடைய ஹ்ருதயாகாசத்திலும் நிரம்பியுள்ளதை அறிந்து ஸாக்ஷாத்கரித்து 'அஹம் ப்ரஹ்மாஸ்மி, எனும் அனுபவத்தில் நிலைத்துள்ளானோ அவன் ஆனந்த ஸ்வரூபியாகவே ஆகிவிடுகிறான். லவ லேசமும் துக்க ஸம்பந்தம் இல்லாதவனாகி விடுகிறான், எப்படி? அவன்தான் ப்ரஹ்ம ஸ்வரூபமாகவே விளங்குகிறானே. அஹங்காரம்; மமகாரம் அற்று விட்டதால் நிஜ ஸ்வரூபமான, ஆனந்தானுபவம் பிரகாசித்துக் கொண்டே இருக்கிறது. ஆத்ம ஸாக்ஷாத்காரத்தை அடைந்ததும் அவித்யா நிவர்த்தியும், அவித்யா கார்யமான மனோ நாசமும் அதனால் நான் கர்த்தா, நான் போக்தா, நான் துக்கமுள்ளவன், ஸம்ஸாரீ போன்ற மித்யா (பொய்) ஞானமும் தானாகவே நிவர்த்தியாகி விடுகிறது. இவன், என்றும் எதனாலும் ஜனன மரண ப்ரவாஹத்தில் மக்நனாகான். (மூழ்கமாட்டான்) இதுதான் முக்தி நிலையாக இருக்கலாம் என்று ஒருவாறு ப்ரதிபாதனம் செய்ய முயற்சிக்கிறோம். ஆனால் மோக்ஷானந்தம், ப்ரஹ்மானந்தம், ஆத்மானந்தம் என்று கூறப்படுவது "ஸ்வானுபவைக வேத்யம்'' தன் அனுபவத்தால் உணரத்தான் முடியும்; விண்டு சொல்ல இயலாது

स्वानुभूत्येकमानाय नमश्शान्तायवेधसे।

என்பது மஹரிஷிகள் வாக்கு.

ஓர் அளவு முடிந்தவரை, அறிந்தவரை ஆத்ம ஸ்வரூபம் மோக்ஷ ஸ்வரூபம் பற்றி விளக்கம் தர முயற்சித்தோம்.

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

பிறகு ப்ரபஞ்ச ஸ்ருஷ்டி பற்றி கூறப்படுகிறது.

तस्माद्वा एतस्मात्...... अन्नरसमयः।

இந்த பரமாத்ம ஸ்வரூபத்திலிருந்து, முதலில் ஆகாசம் தோன்றியது. ஆகாசத்திலிருந்து வாயுவும், வாயுவிலிருந்து அக்னியும், அக்னியிலிருந்து ஜலமும், ஜலத்திலிருந்து ப்ருதிவியும், ப்ருதிவியிலிருந்து ஔஷதிகளும், ஔஷதிகளிலிருந்து அன்னமும், அன்னத்திலிருந்து புருஷனும் தோன்றினர். இந்த புருஷன் ஆகாசாதிக்ரமேண ஸத்பன்னமான அன்ன ரஸமய ஸ்வரூபமான சிர: பாணியாதியுமான ஸ்தூல சரீர விசிஷ்டன். அதாவது அன்ன ரஸமான சரீர உத்பத்தி கூறப்பட்டுள்ளது.

நாம் பார்க்கும் இந்த அன்ன ரஸமயமான ஸ்தூல சரீரத்தில் 1. அன்னமயகோசம் 2. ப்ராணமயகோசம் 3. மனோமயகோசம் 4. விக்ஞானமயகோசம் 5. ஆனந்தமயகோசம் இவ்வாறு ஐந்து கோசங்கள் விவரிக்கப்பட்டுள்ளன. இதை உபாதியாகக் கொண்டுதான் பரமாத்மா ஜீவாத்மாவாக விளங்கிக் கொண்டு ஸம்ஸாரியாக ஸுக துக்காதிகளை அனுபவிக்கிறான். இந்த கோசங்கள் ஒவ்வொன்றுமே பரம்பரையாக ப்ரஹ்ம ஸம்பந்தம் உள்ளதாக இருப்பதால் ஒவ்வொன்றையும் ப்ரஹ்ம ஸ்வரூபமாக உபாஸித்தால் அதற்கும் தனித்தனியே பலன் உபாஸகனுக்கு ஏற்படுகிறது.

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

மேலும், பலாபேக்ஷை இல்லாத (பலத்தில் ஆசையில்லாத) இந்த உபாஸனையால் சித்த சுத்தி ஏற்பட்டு ப்ரஹ்ம ஞானத்தைப் பெற்று மோக்ஷ ஸாம்ராஜ்யம் பெற்று விடுவான்.

ஒவ்வொரு கோசத்தின் ஸ்வரூபம் விளக்கப் படுகிறது.

1. அன்னமயகோசம்.

तस्येदमेवशिरः...... प्रतिष्ठा।

இந்த அன்னமயகோசத்திற்கு ஸ்தூல சரீரத்திலுள்ள சிரஸ்ஸே-சிரஸ; வலது ஹஸ்தமே வலதுகை; இடது ஹஸ்தமே இடதுகை; கண்டத்திற்கும், நாபிக்கும் மத்தியிலுள்ள சரீரமே ஆத்மா; நாபிக்கு கீழ்பட்ட அமர்வதற்கு ஸாதனமாயுள்ள அங்கம் புச்சம் (வால்). இந்த அன்னமய கோசத்திற்கு காரணமான அன்ன ப்ரஹ்மத்தின் பெருமையும் இந்த உபாஸனத்தால் உண்டாகும் பலமும் ப்ரதிபாதனம் செய்யப்படுகிறது.

அனுவாகம்—2

अन्नाद्वै प्रजाः....... तदुच्यत इति।

அடுத்து ப்ருகுவல்லி உபநிஷத்தில் ப்ரஹ்ம ஸ்வரூபத்தின் லக்ஷணம் கூறப்பட்டுள்ளது இந்த அன்னமயகோசத்தை ப்ரஹ்மமாகவும் இந்த உபாஸனம் பலத்தை அளிக்கும் என்றும்

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

கூறுவதால் ப்ரஹ்ம லக்ஷணம் ஓர் அளவு அன்ன ப்ரஹ்மத்தில் பொருந்த வேண்டும் என்று ப்ரதி பாதனம் செய்யப்படுகிறது. அவ்விடம் கூறப் படும் ப்ரஹ்ம லக்ஷணம் என்ன?

यतो वा इमानि भूतानि जायन्ते। येन जातानि जीवन्ति। यत्प्रयन्त्यविसं विशन्ति।

எந்த வஸ்துவிலிருந்து இந்த பூத பௌத்திக ப்ரபஞ்சம் தோன்றியதோ, எதனுல் யாவும் ஜீவிக் கின்றனவோ, ஆயுஸின் முடிவில் எதில் லயிக் கின்றனவோ அதுதான் ப்ரஹ்மம், பரமாத்மா. அன்ன ப்ரஹ்மத்தில் இந்த தர்மங்களை ப்ரார்த் திக்கிறோம். அதாவது அன்ன ரஸத்தினுல்தான் இந்த சரீரம் உண்டாகிறது. அன்னத்தினுல்தான் ஜீவிக்கின்றது. முடிவில் அன்னமாகவே ஆகிவிடு கிறது. எப்படி? உத்பத்தியாகிறது என்பதும், ஜீவிக்கின்றது என்பதும் அறிய முடிகிறது. அன்னமாகவே லயித்து விடுதல் எப்படி?

சில சரீரங்கள் அக்னிக்கு அன்னமாகின்றன. சில சரீரங்கள் ஜல ஜந்துக்களுக்கு அன்னமாகி விடுகின்றன. சில வியாக்ராதிகளுக்கு (புலி முதலிய மிருகங்களுக்கு) அன்னமாகி விடுகின் றன. இவ்விதம் அன்னத்திலேயே லயித்து விடு கிறது. ஆகவே அன்னம் வஸ்துகளுக்குள் சிரேஷ்டமானது. அதனுல்தான் எல்லா ப்ராணி

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

களுக்கும் உள்ள க்ஷுத் வியாதிக்கு (பசி பிணிக்கு) ஔஷதமாக விளங்குகிறது.

क्षुद्व्याधिश्च चिकित्स्यताम्।

பசி என்னும் வ்யாதியை அன்னரூபமான ஔஷதத்தினுல் சிகித்ஸை செய்து கொள்ள வேண்டும். ஸ்ரீ பகவத்பாதாள் இந்த உபாஸக னுக்கு ஸகலவிதமான அன்னுதி போக்யங்கள் ஸித்திக்கும் என்ருர். இவ்விதம் அன்னமய கோசத்தின் உபாஸனம் சொல்லப்பட்டுள்ளது. இந்த உபாஸனத்தினுல் ஓர் அளவு சித்த சுத்தி ஏற்பட்டு மேற்கொண்டு விசாரணை செய்ய முற்படுகிருன் எப்படி?

இந்த அன்னமய (ஸ்தூல சரீரம்) சரீரம் தானுக ஒன்றும் செய்வதற்கில்லை. ப்ராணன் (உயிர்) இருந்தால்தான் செயலே ஏற்படுகிறது. ப்ராணன் ஸம்பந்தம் அகன்ருல் சரீரம் கெட்டு விடுகிறது. ஆகவே இது ப்ரஹ்மம் அல்ல.

அனுவாகம் 3

अन्योऽन्तर आत्मा प्राणमयः।

இரண்டாவது ப்ராணமயகோசம்.

இதை ப்ரஹ்ம ஸ்வரூபமாக பாவித்து உபா ஸனை செய்வதால் ஸம்பூர்ணமான ஆயுஸ்ஸை அடைகிருன். இதற்கு ப்ராணவாயு சிரஸ்,

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

வ்யானன் (வாயு) வலது பக்ஷம் ஹஸ்தம், அபான வாயு இடது ஹஸ்தம். ஆகாசம் நாபி மண்டலத்திலுள்ள ஆகாசத்தில் ஸஞ்சரிக்கும் ஸமான வாயு ஆத்மா நடு சரீரம், ப்ருத்வி உதானவாயு ப்ரதிஷ்டா. இதர வாயுக்கள் சரீரத்தில் இருப்பதற்கு காரணமாக இருப்பதால் ப்ரதிஷ்டை. ப்ருத்வி எப்படி ப்ராணிகளுக்கு இருப்பதற்கு ஸ்தானமாக இருக்கிறதோ, அவ்விதம் இந்த உதானவாயு இதர வாயுக்களுக்கு ஆதாரமாக இருப்பதால் இந்த உதானனுக்கு ப்ருத்வி என்று பெயர். இந்த ப்ராணவாயுவின் ஸம்பந்தத்தால் தான் தேவர் முதலிய எல்லா ப்ராணிகளும் உயிர் வாழ்கின்றன. ஆகவே இது ச்ரேஷ்டம்.

இந்த உபாஸனத்திற்கு தீர்க்காயுஸ் பலம். ஆகவே இந்த உபாஸனத்தினுல் தீர்க்காயுஷ்யத்தை பெற்று ஸுகமாக வாழலாம். க்ரியா சக்தி ப்ரதானமான இரு கோசங்கள் கூறப்பட்டன. இனி ஞான சக்தி ப்ரதானமான மூன்று கோசங்கள் கூறப்படுகின்றன.

அனுவாகம்—4

तस्माद्वा एतस्मात् प्राणमयात् ।

ப்ராணமயகோசத்தில் உயிர் வாழ்வன் பெருமை உள்ளது. ஆனுல் சிந்தனு சக்தி இல்லாமல் உயிர் வாழ்தல் ஸந்தோஷத்தை அளிப்பதற்கில்லை. ஆகவே சிந்தனு சக்தி பொருந்திய

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

மனோமய ப்ரஹ்மோபாஸனம் மேலானது. மனோ மய கோசத்திற்கு யஜுர் வேதம் சிரஸ்; ரிக்வேதம் வலது ஹஸ்தம்; ஸாம வேதம் இடது ஹஸ்தம், வேதத்திலுள்ள ப்ராஹ்மண பாகம் ஆத்மா நடு சரீரம்; அதர்வ வேதம் ப்ரதிஷ்டை. இந்த உபா ஸனம் வாக்கிற்கும், மனதிற்கும் எட்டாததான ப்ரஹ்ம ஸ்வரூபத்தை போதிக்கும். வேதங்களை அந்தக் கரணத்தின் மனதின் மூலமாக அதாவது சம்சயம், நிச்சயம், கர்வம், ஸ்மரணம் எனும் நான்குவித செயல்களுக்கு காரணமான முறையே, மனம், புத்தி, அகங்காரம், சித்தம் இவைகளைக் கொண்டு அத்யயனம், தாரணம் செய்து, சப்த ப்ரஹ்ம ஸ்வரூப உபாஸனம் செய்வதால் ப்ரஹ் மானந்த ஞானம் ஏற்பட்டு க்ரமேண அபய ஸ்தா னத்தை அதாவது முக்தி நிலையைப் பெற்றுவிடு கிறான். இதற்கு அடுத்தபடியாக விக்ஞானமய கோசத்தின் உபாஸனம் சொல்லப்படுகிறது.

அனுவாகம்—5

तस्माद्वा एतस्मान्मनोमयात् । अन्योऽन्तर
आत्माविज्ञानमय: ।

நான்காவது விக்ஞானமயகோசம்.

மனோமய கோசத்தில் காமம் (ஆசை), ஸங் கல்பம், விசிகித்ஸை ச்ரத்தை. அச்ரத்தை, ஹ்ரீ (லஜ்ஜை) பயம், புத்தி முதலிய வ்ருத்திகள் பெரும் பாலும் ஏற்படுகின்றன (உள்ளன). இந்த மனோ

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

மய புருஷனில் ஏற்படும் ஞானம் Literary Knowledge) க்ரந்தங்களைப் படிப்பதினாலும் ச்ரவணம் (கேட்பதாலும்) செய்வதாலும் ஏற்படுவது நான் காவதான விக்ஞானமயகோசத்தில் முன் கூறிய படி அறியப்பட்ட விஷயத்தை நான் அடையத் தகுந்தவன். அதற்குறிய க்ரியைகளை இவ்விதம் செய்ய வேண்டும். நான் இவைகளை அனுஷ்டிக்கும் கர்த்தா, எவ்விதம் செயல்பட வேண்டும் எனும் முறையை அறிந்து அதன்படி செயல் புரிந்து அதன் பயனைப் பெற வேண்டும், எனும் ஞானத்தைப் பெற்றுள்ளவன். (அதாவது செயல், செயல் முறைகளை பற்றிய அறிவு, செயல்படுதல் (Practrical Knowledge).

இந்த விக்ஞானமயகோச புருஷனுக்கு ச்ரத்தை சிரஸ் ऋतं வலது ஹஸ்தம்; सत्यं இடது ஹஸ்தம் योग: आत्मा-நடுசரீரம்; महः என்ற ஹிரண்ய கர்ப்பர் பிரதிஷ்டை; (ஹிரண்ய கர்ப்பர் ஸமஷ்டி ஜீவன்) இவருடைய பெருமை கூறப்படுகிறது.

विज्ञानं यज्ञं तनुते..... समश्नुत इति।

விக்ஞானகோச புருஷன்-யக்ஞாதி கர்மாக்களை அனுஷ்டிக்கிறன். எல்லா தேவர்களும், ஹிரண்யகர்ப்ப ஸ்வரூபியான ப்ரஹ்ம ஸ்வரூபத்தை உபாஸிக்கிறுர்கள். இந்த விக்ஞானமய புருஷன் ப்ரஹ்ம ஸ்வரூபத்தை ஜாக்கிரதையுடன் உபாஸிப்பவன் அதாவது. விக்ஞானம்தான் கர்த்

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

ருத்வத்தோடு கூடியது. இந்த கோசத்திற்கு ப்ரதிஷ்டையை கொடுக்கும் பரமாத்மா கர்த்ருத்வ, போக்த்ருத்வ ரஹிதன். ப்ராந்தியினால் (அறியாமையினால்) இவனை கர்த்தா போக்தா என்று சொல்லுகிறார்கள். இப்படி உபாஸிப்பவன் சரீரத்தைச் சார்ந்த பாப்மாதிகளை (பாபங்களை) உதறித் தள்ளிவிட்டு எல்லா ஆனந்தங்களையும் ப்ரஹ்மானந்தத்தில் திளைத்து விடுகிறான். அடுத்தபடியாக ஆநந்தமயகோசம் கூறப்படுகிறது.

तस्माद्वा एतस्मात् विज्ञानमयात्। अन्योऽन्तर आत्मा नन्दमयः।

விக்ஞானமயகோசத்தில் ப்ரதிஷ்டையாகக் கூறப்பட்ட ஹிரண்யகர்ப்பரை ப்ரதமசரீரி என்று சொல்லுவார்கள். இவர் ஸகுண ப்ரம்மமே. இந்த ஸகுண ப்ரஹ்மோபாஸனத்தினால் க்ரமேண நிர்குண ப்ரஹ்ம ஸாக்ஷாத்கார முக்தி நிலை ப்ராப்தமாகி விடுகிறது. அந்த நிர்குண ப்ரஹ்ம ஸ்வரூபமானது ஆனந்தமய கோசத்தினால் ப்ரதிபாதனம் செய்யப்படுகிறது. நிர்குண ப்ரஹ்மஸ்வரூபம், ஆனந்தஸ்வரூபம், நிர்விகாரம், நித்ய சுத்தம், நித்யபுத்தம் (நித்யமான ஞானஸ்வரூபம்) இந்த ஆனந்தம் ஸ்வானுபவைக வேத்யம் (உணர்ந்து மகிழும் நிலையில் உள்ளது). இந்த ஸந்தோஷத்தை எப்படிக்கூற முடியும்? அனுபவித்துதான் தெரிந்து கொள்ள முடியும். பொதுவாக

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

நாம் அனுபவிக்கும் அந்தந்த விஷயானந்தம் கூட அந்த விஷயத்திலுள்ளதல்ல. அகண்டமான ஆனந்த ஸ்வரூப ப்ரஹ்மத்தில் எல்லாவிஷயங்களும் கற்பிக்கப்பட்டுள்ளதால் (அதாவது தோற்றமளிப்பதால்) அந்த ப்ரஹ்மானந்தத்தினுடைய லவலேசம் விரும்பிய விஷயங்கள் கிடைத்ததும் பெறப்படுகிறது.

स्वात्मानन्दलीभूत ब्रह्मायानन्द सन्तति: ।

ஆனந்தமயகோசம் என்பது ஆனந்த விகாரத்தை உடையது என்று பொருள். ப்ரசுரானந்தம், ஆத்மானந்தம், ப்ரஹ்மானந்தம் என்பது நிர்விகாரமானது, எங்கும் வியாபித்துள்ளது. ஞ்யப்தி (ஞானம்) ஸ்வரூபமானது. ஆகாசம் போன்று எங்கும் நிரம்பியது. தாரதம்யமற்றது. இங்கு ஒரு ஸம்சயம். அப்படியானால் நாம் அந்தந்த விஷயங்களில் வெவ்வேறு விதமான ஆனந்த அனுபவத்தை பெறுகிறோமே வெனில் அப்படி அன்று. எங்கும் வ்யாபித்துள்ள ஆகாசத்தை கடாகாசம் (குடத்திற்குள் இடைவெளி) என்றும், மடாகாசம் (கூடங்கள் முதலியவைகளுல் உள்ள இடைவெளி) என்றும், க்ரஹாகாசம் (வீட்டிற்குள் இருக்கும் இடைவெளி) என்றும் கூறுகிறோம். மேல்வாரியாக அப்படியே உணர்கின்றோம் அல்லவா? இது பிழை என்பது எல்லோருக்கும் ஸாமான்யமாக விசாரித்தாலே புரியும். அதுபோல கடம், மடம் முதலிய உபாதி

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

கள் நாசமடைந்து விழும்பொழுது எல்லாமே ஒன்ருகிவிடும். இதைத்தான் உபாதி க்ருத தார தம்யம் என்று மஹான்கள் கூறுவர்.

இந்த கோசத்திற்கும் முன்போல சிரஸ் முதலியன கூறப்படுகிறது. இந்த ஆனந்தமய கோசத்தில், ஆனந்தமய புருஷனுக்கு ப்ரியம் என்கிற ஆனந்த வ்ருத்தி சிரஸ்; மோத: என்பது வலது ஹஸ்தம் प्रमोदः என்பது இடது ஹஸ்தம்; आनन्दः (ஆனந்தம்) என்பது மத்ய சரீரம்; இவைகளில் ஆனந்தத்தை அளிக்கும் புச்ச ப்ரஹ்மமே ப்ரதிஷ்டா ரூபமானது. இந்த ப்ரஹ்மானந்தம் தான் ப்ரியரூபமான ஆனந்தத்திலும், மோதத்திலும் ப்ரமோதத்திலும் ரூபகமாக ப்ரதிபாதனம் செய்யப்பட்ட மத்யசரீரத்திலும் வ்யாபித்துள்ளது.

(1) ப்ரியம் என்ருல், அபீஷ்டமான விஷயத்தை பார்த்ததும் ஏற்படும் ஆனந்தம்.

(2) மோத: என்பது, அதை அடைந்ததும் உண்டாகும் ஆனந்தம்.

(3) ப்ரமோதம் என்பது, அந்தந்த வஸ்துக்களால் அடையும் நன்மைகளால் ஏற்படுவது.

இவைகள் வ்ருத்யானந்தம் என்று மஹான்களால் கூறப்படும். அந்தக்கரண வ்ருத்திகளில் ப்ரதிபிம்பிதமான ப்ரஹ்ம சைதன்யத்திஞல் அதா

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

வது ஆனந்த ஸ்வரூபத்தினால் ஏற்படும் ஆனந்தம். வ்ருத்திகளில் (ப்ரதிபிம்பிக்காத) ஸம்பந்தப் படாத சைதன்ய ஸ்வரூபமான ப்ரஹ்மானந்தமே நிர்குண ப்ரஹ்ம ஸ்வரூபம். இதை அறிந்து ஏதாத் ருச ப்ரஹ்ம ஸ்வரூபமாக நான் இருக்கிறேன் என்ற ஞானத்தை அறிந்த தத்க்ஷணமே ब्रह्मसमश्नुते என்றும் நிலையிலேயே ஆனந்தமாக ஸஞ்சரிப்பான். அந்த நிலை எது? அது அவனுக்குத்தானே தெரியும். அதை எப்படிக் கூறுவது.

பஞ்சகோசத்தைப் பற்றி ஒரு விளக்கம். கோசம் என்றால் உறை என்பது. ஸ்தூல தேஹம் எனும் இந்த புருஷ சரீரம் தலை முதலிய அவயவங்களோடு கூடியது. இதை உறையாகக் கொண்டு ப்ராணமய சரீரம் என்பது உள்ளது. ஆகவே அதற்கும் சிரஸ் முதலிய அவயவங்கள் கற்பிக்கப்பட்டுள்ளன. ப்ராணமய சரீரம் ஸூக்ஷ்மமானது. இதை உறையாகக் கொண்டுள்ளது மனோமய சரீரம். இதற்கும் சிராதிகள் (சிரஸ்) உருவகப்பத்தி கூறப்பட்டுள்ளது. இதை உறையாகக் கொண்டது விக்ஞானமயக்கோசம். அதற்கும் சிராதிகள் (சிரஸ்) உருவகப்படுத்தி கூறப்பட்டுள்ளது. ப்ராணமயக்கோசத்தைக் காட்டிலும் இன்னும் ஸூக்ஷ்மமானது. இதை உறையாகக் கொண்டுள்ளது ஆனந்தமயகோசம். இதற்கு சிராதிகள் (சிரஸ்) கற்பனையாகக் கூறப் பட்டுள்ளது. எல்லாமே கற்பனைதான். சுலப மாக அறிந்து கொள்வதற்காக இந்த மார்க்கம்

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

கூறப்பட்டுள்ளது. இந்த ஆனந்தமயகோசத்தில் ஆனந்தாத்மகமான பரமாத்மா ப்ரதிபிம்பித்து உள்ளதால் ஆனந்தமயகோசம் மிகவும் ஸூக்ஷ்மமானது. இந்த உபாஸனத்தில் நிலைத்து இருந்து விட்டால் ப்ருஹ்ம ஸ்வரூபத்தை சுலபமாக அறிந்து கொள்வதுதான் இந்த ப்ரகரணத்தின் தாத்பர்யம், லக்ஷ்யம்.

அநுவாகம்—6

असन्नेव स भवति।

உலகத்தில், சாமான்ய ஜனங்கள், கண் முதலிய இந்திரியங்களால் க்ரஹிக்கப்படும் வஸ்துக்கள் மட்டுமே உள்ளன. க்ரஹிக்க முடியாத வஸ்துக்கள் இல்லை என்று கூறுவர். ஆகவே ப்ரஹ்மம் என்றும் பரமாத்ம வஸ்து கண் முதலிய இந்திரியங்களால் கிரஹிக்கப்பாடாததால் அப்படி ஒரு வஸ்து இல்லை என்று கூறுவர், ஆனால் பரிசீலித்து விசாரம் செய்யும் விவேகியானவன் கண் முதலியவைகளால் க்ரஹிக்கப்படாவிட்டாலும் ச்ருதி முதலிய ப்ரமாணங்களால் நிகிலத்திற்கும் காரணமான அந்த ப்ரஹ்ம வஸ்துவை அறிந்து ச்ரேயஸ்ஸை அடைய விரும்பி அதற்குறிய முயற்சி செய்து (அதற்கு வேண்டிய ப்ரயத்னங்களைச் செய்து) பரமாத்ம ஸ்வரூத்தை அறிந்து ஆனந்த ஸ்வரூபியான பரமாத்மாவாக ப்ரஹ்ம பாவத்தில் நிலைத்து விடுகிறான். இத்தகய வஸ்து கிடையாது என்று முதலில் கூறுபவன்

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

அஸத்தாகவே ஆகிவிடுகிறான், கெட்டுவிடுகிறான். முயற்சி எடுத்துக் கொள்வதில்லை.

இரண்டாவதாக சொல்லப்பட்ட விவேகியோ அதை உள்ளதாக அறிந்து அதைப் பெறவேண்டியதிற்கு உபதேசிக்கப்பட்ட ஸாதனநுஷ்டானங்களைச் செய்து நிச்ரேயஸத்தைப் பெற்று விடுகிறான். இந்த இரண்டாமவனை ஸத் என்று கூறுவார்கள். இது வரை ச்ரவணாத்மகமான ப்ரஹ்மோபதேசம் செய்யப்பட்டது. இதற்கு மேல் ச்ரவணம் செய்யப்பட்ட விஷயத்தில் தார்ட்யம் ஏற்படுவதற்காக மனன ப்ரகரணம் கூறப்படுகிறது. இது ப்ரச்ன ப்ரதிவசன ரூபமாக ஆரம்பிக்கப்படுகிறது. சிஷ்யன் ப்ரச்னம் செய்வதாயும் ஆசார்யன் ப்ரதிவசனம் அளிப்பதாகவும் நிருபணம் अथातोऽनुप्रश्नाः தான் ச்ரவணம் செய்த விஷயத்தில் சிஷ்யன் ஆசார்யனைப் பார்த்து ப்ரச்னம் செய்கிறான்.

उताविद्वानमुं लोकं प्रेत्य।

ஆரம்பத்தில் ப்ரும்மவித்து மேன்மை அடைகிறான் என்று கூறப்பட்டுள்ளது. அப்படியானால் ப்ரும்மத்தை அறியாதவன் மேன்மை அடைவதில்லை என்று அறியப்படுகிறது. இவ்விஷயத்தில் விஸ்தாரமாக விசாரம் செய்யப்படுகிறது. அவித்வான் தேஹத்தை விட்டு விட்டு சென்று அந்த பரமாத்ம ஸ்வரூபத்தை அடைகிறானா?

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

அல்லது அடையவில்லையா? இவ்விதம் இரண்டு ப்ரச்னங்கள் (கேள்விகள்).

आहो विद्वानमुं लोकं प्रेत्य। कश्चित्सम श्नुता( ) उ

வித்வான் தேஹத்தை விட்டு இந்த லோகத்தை விட்டுச் சென்று அந்த பரமாத்மன் ஸ்வரூபத்தை பார்க்கிருனு? அடைகிருனு? அடையவில்லையா? வித்வான் அடைகிருன் என்ருல், அவித்வானும் அடைந்துதான் ஆகவேண்டும். ஏன்னெனில் இருவரிலும் பரமாத்மாதானே ஜீவஸ்வரூபேண அனுப்ரவேசம் செய்துள்ளார்.

அவர்தானே நிகில ஜகத்துக்கும் காரண ஸ்வரூபம். இருவருமே வித்யாஸமில்லாமல் பரமாத்ம ஸ்வரூபத்தை அடைந்து விடலாம் என்ருல் ஆத்ம ஞானத்தைப்பெற பிரயத்தனமே தேவையில்லை யல்லவா? இப்படி எல்லாம் சந்தேகம் ஏற்படுகிறதே! அப்படியன்று. ஜீவன் தன்னுடைய அக்ஞானத்திஞல் தான் தன்னுடைய நிஜஸ்வரூபமான பரமாத்ம பாவத்தை தெரிந்து கொள்ளாமல், ஸம்ஸாரியான துக்கம், சிறிது ஸுகம் உள்ள ஜீவஞக எண்ணிக்கொண்டு திணறுகிருன்.

अज्ञानेनावृतं ज्ञानं तेनमुह्यन्ति जन्तवः (गीता)

அக்ஞானத்திற்கு இரண்டு சக்தி உள்ளது. ஒன்று ஆவரண சக்தி—உண்மையை உள்ளதை

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

மறைப்பது. இரண்டு விக்ஷேப சக்தி இல்லா ததை தோற்றுவிப்பது. இத்தகைய அக்ஞானம், நிவர்த்தியானால்தான் உண்மை அறிவு, அதாவது நிஜஸ்வரூபாநுபவம் கிடைக்கிறது. இந்த அக்ஞானம் ஆத்ம ஞானத்தினால்தான் நிவர்த்திக்கப் படும். அதனால்தான் ஆத்ம ஞானம்பெற அதிக முயற்சி தேவை. (அதிக ப்ரயத்னம் அவசிய மாகிறது).

ज्ञानेन तु तदज्ञानं येषां नाशितमात्मनः।
तेषांमादित्यवज्ज्ञानं प्रकाशयति तत्परम्॥

1. ஆத்ம ஸாக்ஷாத்கரம் பெற்ற வித்வான் (ஜீவன்) அப்பொழுதே ஜீவன் முக்தனாக ப்ரகாசிக்கிறான். தேஹபாதானந்தரம் (தேஹத்தை விட்ட பிறகு) விதேஹ கைவல்யத்தை (சரீரம் அழிந்து மோக்ஷத்தை அடைவது) அடைந்துள்ளான் என்று பிறரால் கூறப்படுகிறார், அவ்வளவுதான்.

2. அக்ஞானம் நிவர்த்தியாகாத ஜீவனே ஆவரண விக்ஷேப சக்தியோடு கூடிய அக்ஞான விசிஷ்டனாக இருப்பதால், நான் துக்கீ, நான் ஸுகீ, நான் கர்த்தா, நான் போக்தா இவ்வித பாவந்தோடு இருப்பதால், இவன் மரிக்கும் பொழுது ஜீவனாகவே மரிக்கிறான். ஆகையால் இவனுடைய கர்மானுஸாரத்தினால் அதற்குரிய ஜன்மாவை அடைய வேண்டியவனாகிறான். அனுவாக ஆரம்பத்தில் ப்ரஹ்மத்தை அஸத்து

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

(இல்லாதது) என்று அறிபவன் அஸத்தாக போய் விடுகிறான் என்று கூறப்பட்டுள்ளது. ஜகத் காரண பூதமான ப்ரஹ்ம ஸ்வரூபம் ஸத்து என்று முள்ளது என்று அறிபவன் ஸத்தாகவே என்றும் ஸத் சித் ஆனந்த ஸ்வரூபமான ப்ரஹ்ம பாவத்தை பெற்று விடுகிறான் என்றும் உபதேசிக்கப்பட்டுள்ளது. ஜகத்காரண வஸ்துவை அஸத்து என்று கூறுவதற்கு சிறிதும் இடமில்லை, சந்தேகிப்பதற்கு கூட காரணம் கிடையாது எனும் உண்மை ப்ரதிபாதனம் செய்யப்படுகிறது. இது வரையிலுள்ள க்ரந்த ஸந்தர்ப்பத்தால் ஜகத் காரண வஸ்துவான ஆனந்த ஸ்வரூபமான பர ப்ரஹ்ம வஸ்து நிருபணம் செய்யப்பட்டுள்ளது. அது ஸத் ஸ்வரூபந்தான், சைதன்ய ஸ்வரூபந் தான். ஆனந்த ஸ்வரூபந்தான் எனும் விஷயம் நிரூபிக்கப்படுகிறது.

सोऽकामयत.... तत्सत्यमित्याचक्षते।

அன்னமயாதி பஞ்ச கோசங்களில் வ்யாபித்துள்ள அந்தராத்மாவான பரமாத்மா, ஸ்ருஷ்டிக்கு முன்பு அத்விதீயமாக, ஒருவராகவே இருந்தார். அவர் தன்னுடைய சக்தியோடு சேர்ந்து, நான் லோகங்களாகவும், அதில் உள்ள எல்லாமாக வும் ஆகவேண்டும் என்று விரும்பினார். (அதாவது பரமாத்மாவை ஆச்ரயித்திருந்த மாயா சக்தி காமரூபேண (ஆசையாக) விகாரமடைந்தது) பஹுபவனத்தை அதாவது எல்லாமாக ஆவதை

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

விரும்பினுர் என்றுல் அவரும் ஜீவர்களைப்போல் ஆசையை உடையவராகி விட்டாரா? அது அப்படியன்று. அனுதி காலமாக அக்ஞானத்தினுல் ஜீவனுக இருந்து கொண்டு, உண்மை ஸ்வரூபத்தை தெரிந்து கொள்ளாமல், துக்கப்படும் ஜீவர்கள், ஆத்ம ஞானத்தைப் பெற்று நித்யானந்த முக்தி நிலையைப் பெறுவதற்கு வேண்டிய ஸாதநாநுஷ்டானங்களைச் செய்வதற்குரிய தநு-கரண-புவந-போகங்களை அருளுவதற்காக பரமாத்மா யாவற்றையும் ஸ்ருஷ்டி செய்ய விரும்பினுர். அதற்காக, அந்தந்த ஜீவர்களின் கர்மாநுஸாரமாக, ஸ்ருஷ்டி செய்வதற்கு பர்யாலோசனம் செய்து, காணப்படும் இந்த யாவற்றையும் ஸ்ருஷ்டித்தார்.

எல்லா ஜடபதார்த்தங்களையும் ஸ்ருஷ்டித்து, அவைகளுக்கு சைதன்ய ப்ரகாசத்தை ஏற்படுத்துவதற்காக, தானே ஜீவரூபேண அவைகளுள் ப்ரவேசித்தார். இவ்விதமாக ஸ்ருஷ்டித்து "ஸத்" என்னும் ப்ரத்யக்ஷ யோக்கியமான, ப்ருத்வி, ஜலம், தேஜஸ், எனும் மூன்று பூதங்களையும், "த்யத்" எனும் கண்ணுக்கு விஷயமாகாத வாயு, ஆகாசம் எனும் இரண்டு பூதங்களையும் அதே போல் பஞ்சபூதங்களின் சேர்க்கையால் ஏற்பட்டு உள்ள பௌதிக பதார்த்தங்களையும் ஸ்ருஷ்டித்து எல்லாமாக விளங்கினுர். ஸத்ரூபமான பரமாத்மாவிடம் தோன்றியதால் இந்த

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

நிகில ப்ரபஞ்சமும் ''ஸத்யம்'' என்று கூறப்படுகிறது. ஆகவே, ப்ரும்மஸ்வரூபம் 'அஸத்' என்று கூறவே முடியாது. மேலும் பரமாத்மா அஸத்தாக இருந்தால் '''सोकामयत'' அவர் விரும்பினார் என்று எப்படிக் கூறமுடியும். ஆகவே ஜகத் காரணமான பரமாத்மவஸ்து 'ஸத்' ஸ்வரூபம் தான்.

ஆறுவதான பூர்வானுவாகத்தில் சொல்லப்பட்ட விஷயம் பற்றிய மகிமையை, ப்ரகாசப்படுத்துவதான சுலோகம் உபதேசிக்கப்படுறது.

அனுவாகம் 7

असद्वाइदमग्र आसीत् ततोवै सदजायत ।।

பரித்ருச்யமான (நேரில் காணப்படுகிற) இந்த ப்ரபஞ்சம் ஸ்ருஷ்டிக்கு முன்பு அவ்யக்தமாகவே, நாமரூபமற்ற பரமாத்ம ஸ்வரூபமாகவே இருந்தது. அத்தகைய பரமாத்ம வஸ்துதான் நிகில ப்ரபஞ்சத்திலும் தோன்றுவதற்கு காரணமாம். அதிலிருந்துதான் நிகிலமும் வ்யக்தமாய் தோன்றியது. இதுதான் ஸ்ருஷ்டி சப்தத்தின் பொருள், இவ்விதமான பரமாத்மா யாவற்றையும் தனது மாயா சக்தியால் தோற்றுவித்தார். இதுதான் மாயையின் ஆச்ர்யமான சக்தி. எது? இல்லாததை தோற்றிவிக்கும் உள்ளதை மறைக்கும். சுக்தியை (கிளிஞ்சல்) பார்த்து ரஜதம் என்று

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

பிரமிக்கும் சமயத்தில், அதாவது கிளிஞ்சலை பார்த்து வெள்ளி என்னும் அறிவு ஏற்படுகிறதல்லவா! அந்த நிலையில் கிளிஞ்சலிலுள்ள அஞ்ஞானம் உள்ளதான, கிளிஞ்சல தன்மையை மறைத்து இல்லாததான வெள்ளித் தன்மையை ஏற்படுத்துகிறது போல, இவ்விதம் பரமாத்மா தானாகவே செய்து முடித்தார். அதனால் "ஸுக்ருதம்" (ஸ்வக்ருதம்) என்று சொல்லப்படுகிறது. அந்த பரமாத்மா யாவற்றிக்கும் ஆனந்தத்தை அளிக்கும், யாவற்றிலும் ஆனந்தமாக விளங்கும் ரஸஸ்ஸொரூபமானவர், இந்த ரஸஸ் ஸொரூபமான பரமாத்மாவை அடைந்தால் "அஹ்ப்ரஹ்மாஸ்மி" என்று அறிந்தால் ஆனந்தானுபவம் பெறலாம். அதாவது துக்கக்கலப்பே இல்லாத ஆனந்த அனுபவத்தில் திளைக்கலாம் (முழுகலாம்). இந்த ஆனந்த ஸ்வரூபமான, எங்கும் ப்ரகாசிக்கின்ற, பரமாத்ம வஸ்துவின் ஸம்பந்தம் இல்லாவிட்டால் ஒருவன் எப்படி சிறப்பிக்க முடியும். (செயல்பட முடியும்) உயிர்வாழ்வதும்தான் எப்படி முடியும். இந்த பரமாத்மாதான் யாவற்றையும் ஆனந்தமடையச் செய்கிறான்.

எந்த மகானுபாவனான ஜிக்ஞாஸு (ப்ரும்ம ஸ்வரூபத்தை அறிய விரும்புகிறவன்) அதிருச்யம் நிர்தர்மகம்—சப்தத்தால் விளக்கிக் கூற முடியாமை, நிராதாரம் (ஆதாரமற்ற தன்மை) இத்தகைய பெருமை வாய்ந்த அபயஸ்தானமான

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

பரமாத்மாவில் ப்ரதிஷ்டை அடைந்தானே அத் தகைய மகானுபாவன் பயஹேதுவான த்விதீய பதார்தத்தையே காணுததால் (அதாவது, அவன் த்ருஷ்டியில் பரமாத்மாவைத் தவிர்த்து வேறொன் றும் தெரிவதில்லை).

एकमेवाद्वितीयं ब्रह्म "ब्रह्मैवाहमस्मि"।

என்றல்லவா அவன் நிலை.

இந்த பரமாத்ம வஸ்துவுக்கும், தனக்கும் (ஜிக்ஞாஸுவான தனக்கும்) சிறிது பேதம் இருப்ப தாக எண்ணிஞலும் உணர்ந்தாலும் பயமற்ற நிலையை அடையமாட்டான். பயஸ் தானத்தி லேயே இருப்பான். அதாவது, அவனுக்கு முக்தியே கிடைக்காது. ஜனன மரண ப்ரவாகத் தில் இருந்து விடுபடான்.

அனுவாகம்—8

भीषाऽस्माद्वात: पवते।

ஸகுணேபாஸனங்களை அனுஷ்டித்து அதன் பலஞக தேவதா ஸ்வரூபத்தை, ஆதிகாரிக புருஷ ஸ்தானத்தை அடைந்து இருந்தாலும் அத் வைதாத்ம ஞானத்தை அதாவது ப்ரும்ம ஸாக்ஷாத் காரத்தை அடையாதவரையில் பயநிவர்த்தி ஏற் படாது என்பது நிரூபிக்கப்படுகிறது.

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

உபாஸனு மகிமையால் தேவதா பாவத்தை அடைந்த வாயு பகவானும் பரத்மாவிடம் உள்ள பயத்தினுல்தான் எப்பொழுதும் ஸஞ்சரித்துக் கொண்டு இருக்கிருர் (எப்பொழுதும் வீசிக் கொண்டு தன்னுடைய ஸ்வதர்மத்தை (காற்று வீசுவதை) செய்கிருர்). இவ்விதமே மற்ற ஸூர்யன், அக்னீ, இந்திரன் இவர்களும் தம்தம் காரியங்களை புரிகின்றனர். ம்ருத்யுவும் தன்னுடைய காரியத்தை ஓடி ஓடி புரிகிருர். ஆனந்த ஸ்வரூபியான பரமாத்மாவின் ஸாக்ஷாத்காரம் பெற்றவருக்கு இந்த நிலை இல்லை.

இந்த ஆனந்த ஸ்வரூபத்தின் பரமாத்மாவின் ஆனந்த மகிமையின் அளவை, எல்லையற்ற ஆனந்தத்தின் ஸ்வரூபத்தை ஒருவாறு திருஷ்டாந்தத்தினுல் விளக்கப்படுகிறது. இதைப் பற்றிய விஸ்தாரமான விசாரம்—

सैषाऽनन्दस्यमीमाꣳसाभवति।

ஒருவாறு ஆனந்தத்தின் அளவுகோல் நிர்தேசம் செய்யப்படுகிறது.

युवास्यात् साधुयुवाऽध्यायकः।+ सएको मानुष आनन्दः।

யார் மனுஷ்யானந்தத்தைப் பூர்ணமாகப் பெற்றவன்? யுவாவும், அதுவும் ஸுரூபம், இந்த்ரிய பாடவம் (சுறுசுறுப்பு) வித்யை-செய்ய வேண்டிய

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

கர்மாக்களை, சீக்ரமாகவும், செவ்வனே புரியும் தன்மை, மனோ தைர்யம்—சரீரபலம், இவைகளை பரிபூர்ணமாய் அடைந்து ஸகல போக்ய வஸ்துக் களும் நன்கு நிரம்பியுள்ள அகண்ட பூமண்டலத் திற்கும், ஏக சக்ராதிபதியாய் விளங்கும் புண்ய சாலியின் ஆனந்தம்-ஸம்பூர்ணமான ஒரு மனுஷ் யானந்தமாம். இதன் நூறு மடங்கு ஆனந்தம் மனுஷ்ய கந்தர்வகளுக்குரியது. மனுஷ்யனாக இருந்து புண்ய கர்மாக்களைப் புரிந்து, கந்தர்வ பாவத்தை அடைந்தவர்கள் மனுஷ்ய கந்தர்வர் கள். இங்கு ஓர் அற்புத விஷயம் விளக்கப்படு கிறது. இந்த மனுஷ்ய கந்தர்வர்களின் ஆனந்த மும், மற்றும் மேற்கொண்டு கூறப்படும் யாவரு டைய ஆனந்தமும் ஒரு அகாமஹத (ஆசையில் லாத) ச்ரோத்ரியரிடம் பிரகாசிக்கிறது.

அதாவது அவ்வளவு ஆனந்தத்தையும் அந்த மஹானான அகாமஹத ச்ரோத்ரியர், ஆஸக்தி (பற்று) இல்லாமல் அனுபவிக்கிறான் என்பது தாத்பர்யம்.

असकृत्सुखुमन्वभूत्।

முதலில் பிரதிபாதனம் செய்யப்பட்ட ஸம் பூர்ணமான மனுஷ்யானந்தம், அகாமஹத ச்ரோத்ரியனுக்கு பொருட்டே இல்லை.

2. மனுஷ்ய கந்தர்வனுடைய ஆனந்தத்தின் நூறு மடங்கு கொண்டது தேவ கந்தர்வர்களின்

5

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

ஆனந்தம். தேவ கந்தர்வர்களின் ஆனந்தத்தின் நூறு மடங்கு கொண்டது பஹு காலம் சாச்வதமாக இருக்கக் கூடிய உலகங்களைக் காணும் பாக்கியம் கொண்ட ப்ருது தேவதைகளின் ஆனந்தம். இதன் நூறு மடங்கு கொண்ட ஆனந்தம் ஆஜாநம் எனும் லோகத்தில் உண்டான தேவர்கள், ஆஜாநிஜர்கள் எனப்படுவர். இவர்களின் ஆனந்தம் முன் கூறப்பட்டது.

ஆஜாநிஜர்களின் ஆனந்தத்தின் நூறு மடங்கு கர்மதேவர்களின் ஆனந்தம். கர்மதேவர்கள் என்பவர் கார்மானுஷ்டானத்தின் பயனாக தேவர்களானவர்கள். இவர்களின் நூறுமடங்கு ஆனந்தம் ஹவிர்பாகத்தைப் பெறக் கூடிய முப்பத்திமூன்று தேவர்கள், இவர்களுடைய ஆனந்தத்தின் நூறு மடங்கு இந்திரனின் ஆனந்தம். இந்திரனின் நூறு மடங்கு ஆனந்தம் ப்ருஹஸ்பதி பகவானுடையது, இவருடைய நூறு மடங்கு ஆனந்தம் விராட்புருஷனுடையது. இவருடைய நூறு மடங்கு ஆனந்தம் ஸூத்ராத்மா எனும் ஹிரண்யகர்பருடையது. இவ்வளவு தாரதன்மையோடு கூடிய ஸாம்சாரிகானந்தத்தின் மேன்மை ஹிரண்யகர்பரோடு பூர்த்தியாகிறது.

இவ்வளவு ஆனந்தமும் அகாஹமத ச்ரோத்ரியரிடம் நிறைந்துள்ளது.

அகாமஹத ச்ரோத்திரியன் என்பவர் யார்?

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

இவர் — ஆசையினுல் அலைக்கழிக்கப்படாத தவர். ஆசையை வென்றவர், ஆசையால் கொல்லப்படாதவர். ஆசையினுல் வெல்லப்படாதவர், ஆசைக்கு அடிமையாகாதவர், ஆசையை அடிமையாக்கி கொண்டவர். கீழே விவரிக்கப்பட்ட ஆனந்தத்தை (விஷயானந்தத்தை) கிஞ்சித்தும் (கொஞ்சம் கூட) விரும்பமாட்டார். சரி, இவருக்கு ஆனந்தமே கிடையாதா? ஆம். இவர் அகண்டானந்த ரஸஸ் ஸ்வரூபமான ப்ரஹ்ம ஸாக்ஷாத்காரத்தை அடைந்து விட்டார். ஆகவே இவர் ஆனந்த ஸ்வரூபமாகவே விளங்குகிருர். அம்ருதம் போன்ற சுத்தோதக சமுத்திரக்கரையில் வசிப்பவர், கால்வாய் ஜலத்தை விரும்பமாட்டாரல்லவா? ப்ரும்ம ஸாக்ஷாத்காரத்தை பெற்ற ஆத்மாவும், ஜோதிர் லோகத்தில் ப்ரகாசிக்கும் உத்தமோத்தம ஜீவஸ்வரூபியான ஆதித்யனின் ஆத்மாவும் ஒரே ப்ரஹ்ம ஸ்வரூபந்தான். இவ்வளவு ப்ரபாவமுடைய ஸ்வாத்மானந்த ஸ்வரூபத்தை அறிந்தவன், தன்னைக் காட்டிலும், பஹிர்பூதமான, புத்ர, மித்ராதிகளில் வைத்துள்ள ஆத்மபாவத்தை விலக்கிக் கொண்டு, அவைகளில் ஆத்மபாவத்தை வைத்துள்ள காரணத்தால் உண்டான அவைகளுக்கு ஏற்படும் துக்கத்தை தன்னுடையதாகவே எண்ணி துக்கப்படுவதில் இருந்து விடுபடுகிருன்.

இவ்விதம், அன்னமயகோசத்திலிருந்தும், முறையே ப்ராணமயகோசம், மனோமயகோசம், விக்ஞானமயகோசம், இந்த நான்கு கோசங்களி

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

லிருந்தும வெளிப்பட்டு ஆனந்தமயகோசத்தை அடைந்து, ப்ரியம், மோதம், ப்ரமோதம் முதலிய (உபாதிகளோடு கூடிய) ஸோபாதிகமான, ஆனந்தத்தை ஸாரமற்றதாயும், விகாரத்ரோடு கூடியதாகவும் ஆகவே அநித்யமாயும் நன்கு அறிந்து, இவைகளை உதறிவிட்டு, சாச்வதமாயும், ஸ்வரூபபூதமாயும், நிர்விகாரமாயும், நிருபாதிகமாயும் உள்ள ஸ்வரூபானந்தத்தை அடைந்து விடுகிறான். இதன் பெருமையை அடுத்து வரும் சுலோகம் பிரகாசப்படுத்துகிறது.

அனுவாகம்—9

यतोवाचोनिवर्तन्ते ।।..... नबिभेतिकुतश्चनेति ।

இதன் தாத்பர்யம் மனோமயகோசப்ரகரணத்தில் விளக்கப்பட்டுள்ளது. அவ்விடத்தில் "नबि-भेति कदाचन" என்று கூறப்பட்டுள்ளது. இவ்விடத்தில் "नबि भेति कुतश्चन" என்று உள்ளது. மனோமய கோசப்ரகரணத்தில், ஒரு பொழுதும் பயத்தை அடைய மாட்டான் என்பது பொருள். அதாவது, பயத்திற்கு காரணங்கள் ஏற்படினும் அவைகளை தகுந்த பரிஹாரங்களினால் போக்கடித்துக் கொண்டு பயமற்ற நிலையில் இருப்பான்.

அத்வைத நித்யானந்த ஸ்வரூபமான பரமாத்ம பாவத்தை அடைந்த, அதாவது பேத காரணமான அஞ்ஞானம் பூர்ணமாக நாசம் அடைந்த. நிலையில் ஸ்வஸ்ரூபானந்த நிலையில் பிரகாசிக்கின்றவனோ

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

பயஹேதுவான த்விதீய வஸ்துவே, தன்னைத் தவிர்த்து இரண்டாவது வஸ்துவே கிடையாததால், எந்த ஒன்றிலிருந்தும் பயத்தையே உணரமாட்டான். அந்த மஹாநுபாவன் நித்யானந்த ஸ்வரூபனாகவே விளங்குகிறான்.

एतꣳहवावनतपति॥ इत्युपनिषत्॥ ।

ப்ரஹ்மஸாக்ஷாத்காரம் பெற்றவன் ஒரு இடத்திலிருந்தும் பயத்தை அடையமாட்டான் என்பது எப்படி பொருந்தும். ஏனெனில், எவறும் மரண காலம் ஸமீபித்த நிலையில் இப்படியெல்லாம் சிந்தனை செய்து தாபத்தையும், பயத்தையும் அடைவரே எனில் அப்படியன்று "நான் இன்ன இன்ன பாபத்தை புரிந்துவிட்டேனே, நான் என்ன புண்ணியம் செய்துள்ளேன்", இம்மாதிரியான தாபத்தையும், பயத்தையும் ஏற்படுத்தக்கூடிய சிந்தனைகள் இந்த மஹானுக்கு ஏற்படாது. மற்றவர்களுக்குத்தான் ஏற்படும். இந்த மஹான் சாஸ்திரத்தினாலும் யுத்திகளாலும் ஆத்மா, கர்மாக்களுக்கு கேவலம் ஸாக்ஷிதான். கர்தா அல்ல என்பதை நன்கு அறிந்து கொண்டுள்ளவன். ஆகவே தர்மாதர்மஜனயமான (தர்மத்தினால் உண்டான) புண்ய பாபங்கள் இவனை தாபமடையச் செய்யா என்பதை நன்கறிந்துள்ள மஹான் இந்த புண்யபாபங்களையும் ஆத்மஸ்வரூபமாக அல்லவா காண்கிறான். தர்மம், அதர்மம் புண்யம், பாபம், ஸுகம், துக்கம் யாவும் அக்

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

ஞான காரியங்கள். கர்தா போக்தா என்பதும் அக்ஞான கல்பிதமே, இந்த மஹானிடமோ அக்ஞான க்லேசமும் இல்லை. ஆகவே எந்த ப்ரகாரத்திலும் இவனை தாபங்கள் அணுகா. இந்த உத்தமமான உபநிஷத் பாகம் கம்பீரமாக ஞானோபதேசம் செய்து பூர்த்தி அடைகிறது. உத்தர சாந்தி பாடம்.

भृगुवल्ली ப்ருகுவல்லி

नवमः प्रश्नः

सहनाववतु ॥ + ओं शान्तिश्शान्तिश्शान्तिः

சாந்தி பாடத்தின் தாத்பர்யம் முன் வல்லியில் உள்ளது போல்:

அனுவாகம்—1

भृगुर्वै वारुणिः ॥ अधीहि भगवो ब्रह्मेति

ஆரம்பத்தில் *சீக்ஷாவல்லியில்,* சித்த சுத்திக்கு அந்தரங்க ஸாதனங்களும், ப்ரஹ்ம வித்யைக்கு பஹிரங்க ஸாதனங்களுமான கர்மாக்களும், உபாஸனங்களும் உபதேசிக்கப்பட்டன. அடுத்த ஆனந்தவல்லியில் ப்ருஹ்ம வித்யை பரிபாதனம் செய்யப்பட்டது. இந்த வல்லியில் ப்ரம்ம வித்யைக்கு அந்தரங்க ஸாதனங்களான விசாரம் மனனம், நிதித்யாஸம் உபதேசிக்கப்படுகிறது. முதலில் வித்யையின் பெருமையைத்

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

தெரிவிப்பதற்காகவும், சுலபமாக தெரிவிப்பதற்காகவும், சுலபமாக தெரிந்து கொள்வதற்காத்வும் உபாக்யானம் கூறப்படுகிறது. கோத்ர ப்ரவர்த்தரான ப்ரம்ம மஹர்ஷியின் பிதாவான வருண பகவானிடம் க்ரமமாக உபஸத்தி செய்து ப்ரஹ்ம ஸ்வரூபத்தை போதிக்க வேண்டும் என்று ப்ரார்தித்தார்.

பிதாவான வருண பகவான் ப்ரஹ்ம ஞானத்தை அறிந்து கொள்வதற்கு மார்க்கமான அன்னமயாதி கோசங்களின் ஸ்வரூபத்தையும் கோசங்களுக்கு உபாதான காரங்களான, அன்னம் ப்ராணன், சக்ஷுஸ், ச்ரோத்ரம், மனஸ், வாக், பாணி பாதாதிகளையும் மேலும் கூறுகிறார். இவ்வளவுக்கும். பந்து ஸ்வரூபத்தை அளிப்பவர் பரமாத்மாதான் என்பது தாத்பர்யம்.

நீ கேட்கும் ப்ரஹ்ம ஸ்வரூபத்தின் லக்ஷணத்தை கூறுகிறேன். அந்த லக்ஷணத்தைக் கொண்டு நன்கு விசாரணம் செய்து தெரிந்து கொள்வாயாக! இது தான் அதற்கு லக்ஷணம் தடஸ்த லக்ஷணம்.

यतोवा इमानि भूतानि जायन्ते...... तत् ब्रह्मेति।

எந்த காரண வஸ்துவில் இருந்து பூத, பௌதிக ப்ரபஞ்சம் அதாவது ஸகல பதார்த்தங்களும் உண்டாகின்றனவோ, எதனால் விளங்குகின்றனவோ (ஜீவிக்கின்றனவோ) உருமாறும் போது

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

எதில் லயிக்கின்றனவோ, அந்த ஸர்வோதான காரணம்தான், ஜகத்காரணமான ப்ரஹ்ம ஸ்வரூபம்.

"ஸ்வர்ணாபரணம் தங்கத்திலிருந்துதான் உற்பத்தியாகிறது. காரணமான தங்கத்தினுல் தான் ஜீவிக்கிறது. உருமாறும்போதும், தங்கத்தினுல்தான் லயிக்கிறதல்லவா. ஆகவே தங்கம் தான் எல்லா ஸ்வர்ணாபரணங்களுக்கும் காரணமாகிறது". நிகிலப்ரஞ்சத்திற்கும் ப்ரஹ்மம்தான் காரணம். என்று கூறுகிறார். இந்த உபதேசத்தைப் பெற்று ப்ருகு மஹரிஷி க்ரமமான விசாராத்மகமான தபஸ்ஸை அனுஷ்டித்தார்.

सतपोऽतप्यत ।। सतपस्तप्त्वा ।।

அனுவாகம்—2

அன்னமயகோசம்

अन्नं ब्रह्मेति व्यजानात् ।। + अन्नं प्रयन्त्यभिशंविशन्तीति

அன்னமயகோசத்திற்கு காரணமான அன்னத்தை ப்ரம்மமாக அறிந்து உபாஸித்தார். இதன் விவரம் பூர்வப்ரச்னத்தில் விளக்கபட்டுள்ளதையும் பார்க்கலாம், ப்ரம்ம ஸ்வரூபத்திற்கு பிதாவினுல் கூறப்பட்டுள்ள லக்ஷணம் அன்னத்தில் பொருந்தினுலும் அன்னமயகோசத்தில் ப்ராண சம்பந்தம் இல்லையேல் வைலக்ஷண்யத்தை அடைந்து விடுகிறது. மேலும் யாவற்றிற்கும்

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

காரணமாகும் நிலையும் இல்லை, என்பதை நன்கு சிந்தித்து விச்வாஸம் ஏற்படாததால் மறுபடியும் பிதாவை அடைந்து ப்ரஹ்ம ஸ்வரூபத்தை உபதே சிக்குப்படி பிரார்த்தித்தார். வருணனும் தபஸ் ஸினுல்தான் அறிய முடியும். மீண்டும் தவம் புரிந்து தெரிந்து கொள்வாயாக என்று கூற அதன்படி விசாராத்மக தபஸ்ஸை அனுஷ் டித்தார்.

सतपोतप्यत ॥ सतपस्तप्त्वा ।

அனுவாகம்—3

प्राणो ब्रह्मेति व्यजानात् ॥ + सतपस्तप्त्वा ।

ப்ராணமயகோசம். ப்ராணமயகோசத்திற்கு காரணமான ப்ராணஸ்வரூபத்தை ப்ரஹ்மமாக அறிந்து ஓர் அளவு ப்ரஹ்மலக்ஷணம் பொருந்தி னுலும், சைதான்யாம்சம் இல்லாததால் (ஞான சக்தி) இது ப்ரஹ்மமாக இருக்க முடியாது. அது ஞான ஸ்வரூபம் என்று உணர்ந்து மீண்டும் பிதாவை அடைந்து ப்ரஹ்ம ஸ்வரூபத்தை உபதேசித்தருள ப்ரார்த்தித்தார். பிதாவான வருண பகவானும், தபஸ்ஸினுல்தான் அறிய வேணும். தபஸ் செய்து தெரிந்து கொள்வாயாக என்று முன்போல் கூறி விட்டார். விசாராத்மக மான தபஸ்ஸை அனுஷ்டித்தான். அதன் பலனுக மனஸ்ஸை ப்ரஹ்மமாக அறிகிருன்.

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

அனுவாகம்—4

மனோமயகோசம்

मनो ब्रह्मेति व्यजानात्।

ப்ராண பர்யாயத்தில் ப்ராணன், ஜடமான படியால் அதாவது சைதன்யாம்சமான ஞானம் இல்லாததால் இது ப்ரஹ்ம ஸ்வரூபம் அன்று. ஏனெனில் ப்ரக்ஞானம் ப்ரஹ்ம விக்ஞானம் ப்ரஹ்ம प्रज्ञानं ब्रह्म विज्ञानं ब्रह्म என்று கூறப்படு வதால் ப்ரஹ்மஸ்வரூபம் சேதநம் என்பது ஸித்தமானது. ஞானசக்தியோடு உள்ளதால் அதாவது சைதன்யாம்சம் பொருந்தியதால் முன் கூறிய ஜன்மாதிகாரணம் ஒருவாறு அமையலாம் என்பதால் இதை ப்ரஹ்ம ஸ்வரூபமாக உபாஸிக் கலாம். இவ்வாறு அறிந்து உபாஸித்தாலும் மனதும், கண், காது போன்று காரணமாக உள்ள தால், அறிவதற்கு ஸாதனமாக இருப்பதால் இது ப்ரஹ்மமன்று என்று பர்யாலோசனம் செய்து மறுபடியும் பிதாவினிடம் சென்று ஸம்சயத்தை தெரிவித்தார். பிதா வருணனும் முன்போல் தபஸ் ஸினுல் ப்ரஹ்ம ஸ்வரூபத்தை தெரிந்து கொள்வா யாக என்று உபதேசித்தருளினுர்.

அனுவாகம்—5

विज्ञानं ब्रह्मेति व्यजानात्।

ப்ருகுவும் ஆலோசனுத்மகமான அதாவது விசாரத்மகமான தபஸ்ஸை செய்து விக்ஞா

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

னத்தை ப்ரஹ்ம ஸ்வரூபமாக அறிந்தார். விக்ஞான ஸ்வரூபத்திற்கு கர்த்ருத்வம் உள்ளதால் இவருக்கு மனஸ், சக்ஷுஷாதி இந்திரியங்கள் ஸாதனமாக ஆகின்றன. ஆகவே விக்ஞானமய கோசத்தில் ஓரளவும் ப்ரஹ்ம லக்ஷணம் பொருந்துகிறது அல்லவா? அதாவது கர்த்தாவாக இருந்துகொண்டு கர்ம அனுஷ்டானத்தின் பயனுக தேஹோத்பத்தி முதலியன ஏற்படுகின்றன. ஆதலால் லக்ஷண ஸமன்வயம் செய்ய முடியும் என்பது தாத்பர்யம். ஆனாலும் இவ்விதம் அறிந்த பிறகு ஒருவாறு ப்ரஹ்ம லக்ஷணம் பொருந்தினுலும் கர்த்ருவம் என்பது க்லேச ஸ்வரூபமானதே. அவ்வப்போது விஷயானந்தம் ஏற்பட்டாலும் அழிந்தும் துக்கானுபவம் ஏற்பட்டு விடுகிறது. மேலும் ஸகல வஸ்துக்களுக்கும் காரணமாவதற்கு இல்லை. மேலும் ब्रह्म विदाप्नो-तिपरम् என்ற வாக்யப்படி பரம் ச்ரேயஸ்ஸையும் அடைவதற்கில்லை. ஆகவே இதுவும் ப்ரம்ம ஸ்வரூபமன்று என்று பர்யாலோசனை செய்து மறுபடியும் பிதாவான வருண பகவானிடம் சென்று சந்தேகத்தை தெரிவித்து உபதேசித் தருள வேண்டுமென்று வணங்கினுர் வருண பகவானும் தபஸ்ஸினுல்தான் ப்ரஹ்மத்தை அடைவாயாக! தபஸ்தான் ப்ரஹ்மத்தை அடைவதற்கு உத்தம ஸாதனம் என்று உபதேசித்தருளினுர்.

அனுவாகம் 6

आनन्दो ब्रह्मेति व्यजानात्।

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

ப்ருகு மேலும் நன்கு தபஸ்ஸை அனுஷ்டித்து ஆனந்தமயகோசத்திற்கு ஆதாரமாக உள்ள ஆனந்த ஸ்வரூபம்தான் எல்லாவித ப்ரஹ்ம லக்ஷணமும் பொருந்துகிறது. அந்த ப்ரஹ்ம ஸ்வரூபம்தான் "பூம ஸ்வரூபம்" என்றும் பூமா தான் துக்கம் கலவாத ஸுகஸ்வரூபமென்றும், க்லேசாதிகளுக்கு சிறிதும் ப்ரஸக்தி இல்லை என்றும். சாந்தோக்யம் முதலிய உபநிஷத்துக் களில் உபதேசிக்கப்பட்டுள்ளதாலும், இந்த நித்யானந்த ஸ்வரூபம்தான் பரப்ரஹ்மம். இது தான் பரமாத்ம ஸ்வரூபம். இந்த பரமாத்ம ஸ்வரூ பத்தை அறிந்து இந்த பரமாத்ம ஸ்வரூபம்தான் நான், அதாவது ஜீவன் என்பதான அபரோக்ஷ ஸாக்ஷாத்காரத்தை பெற்றவன், சோகமோஹாதி களிலிருந்து விடுபட்டு நித்யானந்தானுபவத்தில் ப்ரகாசிக்கிறான். நித்யானந்தத்தோடு ப்ரகாசிக் கிறான். இவ்விதமான இந்த வித்யைதான் ப்ருகு வினால் நன்கு கண்டறியப்பட்ட ப்ரஹ்மவித்யை. இதுதான் "सैषा भार्गवी वारुणी विद्या" என்று கூறப்படு கிறது.

இதுதான் வருணனால் உபதேசிக்கப்பட்டது. இந்த வித்யை மேலான வித்யையாக ப்ரகாசிக் கிறது. இந்த வித்யையை அறிந்தவன் ப்ரஹ்ம ஸ்வரூபத்தை அடைந்து ப்ரதிஷ்டிதனாக இருப் பான். மேலும் அன்ன ஸம்ருத்தி உடையவனாக வும், மஹானாகவும், ப்ரம்மவர்ச்சஸ், ப்ரஜா ஸம்

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

ருத்தி, பசு ஸம்ருத்தி இவைகளுடன் ஸுகமாக வஸிப்பான். அதாவது இவைகளை விரும்பி அனுஷ்டித்தால் ஐஹிகமான இந்த ஸுகங்களை யும் அடையலாம் என்பது தாத்பர்யம். ஆனால் உத்தம அதிகாரி இவைகளில் ஆஸ்தையை அடைய மாட்டான். இந்த ப்ரஹ்ம வித்யையை அடைவதற்கு ஆஸ்தை தீவ்ரமாக ஏற்படுவதற் காக இவைகள் கூறப்பட்டுள்ளவைகள் என்று மஹான்கள் கூறுவர். மஹான்களின் ஸித்தாந்தம் இது. அன்னமயகோசம் முதல், ஆனந்தமய கோசம் வரையில் உள்ள உபாஸனமும், அதன் பயனும் ப்ரதிபாதனம் செய்யப்பட்டுள்ளது. ப்ரஹ்ம ஞானத்திற்கு பஞ்சகோச ப்ரஹ்ம உபாஸனம் சித்த, சுத்தி த்வாரா ஸாதனம், ஆனு லும் முதலில் அன்னமயகோச உபாஸனம்தான் ப்ரதமத்வாரமாகிறது. ஆகவே அந்த ப்ரஹ்ம உபாஸனம் மிகவும் ப்ரதான உபாஸனம் ஆகிறது. அந்த அன்ன ரூப ப்ரதீகத்தில் ப்ரஹ்ம ஸ்ருஷ்டி செய்து உபாஸிக்க வேண்டும்.

இந்த உபாஸனத்தை செய்பவன் சஞ்சல மற்ற மனத்துடன் அதாவது சித்தை காக்ரயத் தில் ப்ரதிஷ்டதனுகிறுன். அன்ன ஸம்ருத்தி, அதை உபயோகிக்கும் முறை ரோகாதிகள் இல்லாமல் அன்னத்தை அனுபவிக்கும் சக்தி, புத்ரபௌத்ராதி ப்ரஜைகள், பசுக்கள், ப்ரஹ்மவர்ச்சஸ் இவை களுடன் மேன்மையுடன் இருப்பான். இவ்வளவு பெருமைக்கும் அன்னரூப ப்ரதீகம் காரணமாக

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

தம் உள்ளது. இதை அறிந்தவன் முன் கூறப்பட்ட பலன்களை அடைகிறான். இங்கும் வ்ரத நியமம் குறிப்பிடுகிறது.

அனுவாகம்—10

न कञ्चन वसतौ प्रत्या चक्षीत।

வீட்டிற்கு வந்த அதிதியை எந்த காரணத்துடனும் தடுக்கக்கூடாது. நம்மால் இயன்ற அளவு அன்னம் தீர்த்தம், இடவசதி, இவைகளால் உபசரிக்க வேண்டும், அதற்காக யாஜநம், அத்யாபனம், ப்ரதிக்ருஹம் முதலியவைகளால் அன்ன ஸம்ருத்தியை அடைய வேண்டும். வந்தவர்களை உபசரிக்கும் விஷயத்தில் சிஷ்டாசாரம் கூறப்பட்டுள்ளது.

अराध्यस्मा अन्नमित्याचक्षते। एदद्वै मुखतोऽन्नंऽराद्वम्।

முதலிய வாக்யங்களால் எல்லா விதத்திலும் உத்தமமான மொழியில் அதிதிகளை ''அன்னம் ஸித்தமாக உள்ளது, போஜனம் செய்ய வேண்டும்'' என்பது போன்ற உபசரிப்புகள் நல்ல காலத்தில், நல்ல பாத்ரத்தில் நல்ல க்ஷேத்ரத்தில் உட்கார்ந்து ஸம்ஸ்காரம் செய்வது மிகவும் ச்ரேஷ்டமானது. அடுத்து மத்யம ரீதியில் அதிதிகளை உபசரிப்பது மத்யமமானது. அதமமான ரீதியில் ஸத்காரம் செய்வது அதமமானது. முறையே உத்தம ப்ரகாரத்தினால் ஸத்காரம் செய்பவனுக்கு ஜன்மாந்தரத்தில் உத்தம

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

ப்ரகாரமாக அன்ன ஸம்ருத்தி ஏற்படும். ஏன் இதே லோகத்தில் இதே ஜன்மத்தில் கூட அன்ன ஸம்ருத்தி ஏற்படும். கண்காணாத எங்கு சென்று லும் உத்தம ஸத்காரம் பெறுவான். மத்யமமாக மற்றும் அதமமாக ஸத்காரம் செய்பவர்கள், அதற்குரிய பலனை பெறுவார்கள். ஸத்காரம் அதிதிகளை நன்கு உபசரித்தல் மேலும் சில உபா ஸனங்கள் கூறப்படுகின்றன.

क्षेम इति वाचि ॥ + इति मानुषी समाज्ञा: ।

வாக் இந்திரியத்தில் ப்ரும்ம ஸ்வரூபம், க்ஷேம ரூபமென ப்ராகசிக்கின்றது என்று உபா ஸிக்க வேண்டும். ப்ராணன், அபானன் எனும் இரண்டு வாயுக்களில் யோகம், க்ஷேமம் இவ் விரண்டு ரூபமாக ப்ரும்ம ஸ்வரூபம் ப்ரகாசிக்கின் றது. குறிப்பு: யோக: யோகம் அடையப்படாததை அடைதல், க்ஷேமம்; அடைந்ததை ரக்ஷித்தல். கைகளில் ஹோமம், யுத்தம் முதலிய வியாபார ரூபமாக ப்ரும்மவஸ்து ப்ரகாசிக்கின்றது. ப்ராஹ்ம ணனின் கையில் ஹோமரூபமாகவும், பகவத் பூஜா ரூபமாகவும், க்ஷத்திரியருடைய கைகளில் யுத்தாதி ஆயுதமாகவும் வைச்யருடைய கைகளில் வியாபார ரூபமாகவும் அவரவர்களுடைய ஸத் கார்ய ரூபமாகவும் ப்ருஹ்ம ஸ்வரூபம் விளங்கு கிறது. கால்களில் கமன ரூபமாகவும், வாயுவில் (விஸர்ஜன இந்திரியங்கள்) விஸர்ஜன ரூபமாக வும், ப்ரஹ்ம ஸ்வரூபம் விளங்குகிறது. இதுவரை மனுஷ்ய தேஹ அவயவங்களில் உபாஸனம்

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

கூறப்பட்டுள்ளது. இனி தேவதா தேஹ அவயத்தில் உபாஸனம் கூறப்படுகிறது.

अथदैवी: ।। + सर्वमित्याकाशे।

· வ்ருஷ்டி தேவதையில் த்ருப்தி ரூபமாகவும், வித்யுத் தேவதையில் (மின்னல்) பல ரூபமாகவும் (புஷ்டி), பசு தேவதைகளில் கீர்த்தி ரூபமாகவும், நக்ஷத்ர தேவதைகளில் ஜோதி ஸ்வரூபமாகவும் பரமாத்மா ப்ரகாசிக்கிறார். ஸ்த்ரீகளிடத்தில் புத்ர பௌத்ராதி ஸந்ததி ரூபமான ஆனந்த ரூபமாகவும், ஆகாச அபிமானி தேவதையில் பூத பௌதிக ஜகத் ஸ்வரூபமாகவும் பரமாத்மா பிரகாசிக்கிறார். இவ்விதம் உபாஸிக்க வேண்டும். மேலும் பலத்துடன் கூடிய சில உபாஸனங்கள் உபதேசிக்கப்படுகின்றன.

तत् प्रतिष्ठेत्युपासीत।। + परियेऽप्रिया भ्रातृव्या:

அந்த ப்ரஹ்மத்தை ஸ்திதிக்கு காரணமாக உபாஸிக்க வேண்டும். ஸ்திதி-'நன்கு வாழ்வது' இப்படி ப்ரதிஷ்டையுடன் நன்கு வாழ்வான். அந்த ப்ரஹ்மத்தை மிகவும் மேன்மையானது என்று உபாஸிக்க வேண்டும். இப்படி உபாஸித்தவன் தன-தான்யாதிகளுடன் நன்கு வாழ்வான். இந்த பரமாத்மா நல்ல மனன சக்தி உள்ளவர் என்று உபாஸிக்கவும். இதன் பலன் உபாஸிகன் நல்ல சிந்தனை சக்தியுடன் வாழ்வான். அந்த ப்ரஹ்ம ஸ்வரூபத்தை வசீகரண சக்தியுடன் கூடியவர் என்று உபாஸித்தால் எல்லா விருப்பங்களும் இவனை வந்தடையும். இந்த பரமாத்மாவை வேத

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

ஸ்வரூபம் என்று நினைத்து உபாஸித்தால் வேதாத்யன ஸம்பன்னனுக விளங்குவான். உபாஸகனின் சுற்றிலும் உள்ள சத்ருக்களுக்கு இந்த பரமாத்மா மிருத்யூரூபன் (ஸம்ஹரிப்பவன்) என்று உபாஸித்தால் சத்ருக்களால் இவனுக்கு பயம் நேரிடாது.

सयश्चायंपुरुषे।। + एतत्साम गायन्नास्ते।

இவ்விதமான உபாஸனங்களை அனுஷ்டித்து இதே ஜன்மாவிலோ, அல்லது அடுத்த ஜன்மாவிலோ ஏகாக்ர சித்தத்தை அடைந்து, அதாவது சித்த சுத்தி மூலமாக சித்தைகாக்ரிய ஸம்பன்னனுக ஆகி பின்வரும் ஞானத்தை பெறுகிருன். அதாவது உத்தம ஜீவகோடி ப்ரவிஷ்டனுன ஸூர்ய மண்டலத்திலும் ப்ரகாசிக்கின்ற ப்ரமாத்ம ஸ்வரூபமும் என்னிடம் ப்ரகாசிக்கின்ற பரமாத்ம ஸ்வரூபமும் ஒன்றே என்றும், அந்த பரமாத்ம ஸ்வரூபமே நான் தான் என்றும் நன்கு உணர்ந்து, அன்னமயாதி கோசங்கள் பந்த ஹேதுக்களே என்று நன்கு அறிந்து, அவைகளை உதறி தள்ளி விட்டு நித்ய நிரதிசய ஆனந்த ஸ்வரூபமாகவே, அதாவது ஆனந்தானுபவத்தில் விளங்கிக்கொண்டு இந்த லோகத்தில் உள்ள காசி க்ஷேத்ரம், த்வாரகாபுரி முதலிய க்ஷேத்ரங்களில் இஷ்டபடி ரூபங்களை எடுத்துக் கொண்டும், ஆங்காங்கு கிடைக்கும் ஸத்வஸ்துக்களை புஜித்துக்கொண்டும் தன்

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

னுடைய ஆனந்தத்தை ஸாம கானங்களால் ப்ர காசப்படுத்திகொண்டும் இஷ்டப்படி ஸஞ்சரிப்ப தின் மூலம் முக்தி நிலை அடைகிறான். இவனை ஜீவன் முக்தன் என்று கூறுவர்.

हावु हावु हावु ॥ + इत्युपनिषत्।

ஹாவு என்பது அஹோ என்பதின் கான ரூபம் (அஹோ-ஆச்சரியம்) நான்தான் ஸகல மும். போக்தாக்களும் நானே. ஸைன்யங் களுடன் கூடிய அரசனும், பெரிய பெரிய காவியங்களை இயற்றும் கவியும் நானே. அந்த பரமாத்மாவிடம் முதலில் தோன்றிய ஹிரண்ய கர்ப்பரும் நானே. இந்த்ராதி தேவர்கள் உண்டா வதற்கு முன்பே நான் உண்டானேன். மோக்ஷத் திற்கு காரணபூதனே நான் தான்.

எப்படி சக்கரத்திற்கு நாபி என்னும் குடமானது ப்ரதானமானதோ அவ்விதமே மோக்ஷ ஸ்வரூபத்திற்கு நான், அன்னாத்மகமான அந்த ப்ரஹ்ம ஸ்வரூபம். நான் ஆதித்யன் போன்று ஸ்வயம்ஜோதி ஸ்வரூபமாக ப்ரகாசித் துக் கொண்டிருக்கிறேன். இவைகளை நன்கு அறிந்து உணர்ந்தவன் எவனோ அவன் பரமாத்ம ஸ்வரூபமாகவே ப்ரகாசிக்கிறான்.

இத்துடன், தைத்ரீய உபநிஷத்தின் 7, 8, 9 ப்ரச்னங்கள் முடிவு பெறுகிறது.

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

Sri Vedachalam Sastri Collection, Karaikudi